### அதிகாரம் 8

# கிறிஸ்துவின் ஊழியத்தின் மேன்மை

அத்தியாயம் 8-ல் உள்ள முதல் வசனங்களில், 4:14-7:28 இல் விவாதிக்கப்பட்ட, குமாரனின் ஆசாரிய அலுவலகத்திலிருந்து அவருடைய மிகச்சிறந்த ஆசாரிய ஊழியத்திற்கு சிறிது மாறுகின்றன (வசனங்கள் 1-5). நம்முடைய பிரதான ஆசாரியராக கிறிஸ்துவின் மேன்மையைப் பற்றிய பின்வரும் இந்தச் சத்தியங்களை எபிரெயர் கற்பிக்கிறது:

1. மெல்கிசேதேக்கின் முறைமையின்படி கிறிஸ்துவை தேவன் அழைத்தார் (5:10).
2. ஒரு திவ்விய வாக்குறுதி கிறிஸ்துவை பதவியில் வைத்தது (7:20-22).
3. அவருடைய பிரதான ஆசாரியத்துவம் நிரந்தரமானது (7:23, 24).
4. அவருடைய பணி முழுமையான செயல்திறன் கொண்டது (7:25).
5. அவருடைய தனிப்பட்ட தகுதிகள், அவர் நமது பிரதான ஆசாரியராக எப்போதும் சேவை செய்யும்படி செய்தது (7:26-28).
6. அவர் பரலோக வாசஸ்தலத்தில் சேவை செய்கிறார், அது பூமிக்குரிய ஒன்றல்ல (8:1-5).
7. நம்முடைய பாவங்கள் நமக்கு எதிராக நினைவுகூரப்படாமல், முழு மன்னிப்பை அளிக்கிற புதிய உடன்படிக்கையை அளிப்பதில் அவர் சம்பந்தப்பட்டிருந்தார் (8:6-13).

நமது பிரதான ஆசாரிய ஊழியத்தின் பண்புகள் எவை?

# அவருடைய புதிய ஊழியம் (8:1-5)

## மெய்யான கூடாரத்தில் ஒரு ஆசாரிய ஊழியஞ்செய்கிறவர் (8:1, 2)

**[1]மேற்சொல்லியவைகளின் முக்கியமான பொருளென்னவெனில்; பரலோகத்திலுள்ள மகத்துவ ஆசனத்தின் வலதுபாரிசத்திலே உட்கார்ந்திருக்கிற வருமாய், [2]பரிசுத்த ஸ்தலத்திலும், மனுஷரால் அல்ல, கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்ட மெய்யான கூடாரத்திலும் ஆசாரிய ஊழியஞ் செய்கிறவருமாயிருக்கிற பிரதான ஆசாரியர் நமக்கு உண்டு.**

**வசனம் 1.** முக்கியமான பொருள் **என்பதற்கான வார்த்தை** (κεφάλαιος, *கெஃப்பாலயஸ்*) என்பது "கூட்டு," "சுருக்கம்," அல்லது "முக்கிய பொருள்." போன்ற பொருள் கொள்கிறது. இந்தப் பிரிவு ஆசிரியருடைய வாதத்தின் உச்சக்கட்டத்தை அளிப்பதாலும் சுருக்கத்தை விட அதிகமாக உள்ளதாலும் இறுதியானது விரும்பத்தக்கதாக உள்ளது.[1] ஒரு தாழ்ந்த உடன்படிக்கையோடு நமது பிரதான ஆசாரியர் சேவை செய்ய முடியாது; அவரது இடம் உயர்ந்த நிலையில் உள்ளது.

கிறிஸ்துவின் பலியின் பணி முடிந்துவிட்டதால் **அவரது ஆசனத்தின்** … உட்கார்ந்திருக்கிறார். அவர் தனது சிங்காசனத்தில் நமது ராஜாவாக ஆளுகிறார் என்று "ஆசனம்" என்ற வார்த்தை கூறுகிறது. எந்த யூத பிரதான ஆசாரியனும் ஒரு சிங்காசனத்தில் உட்காரவில்லை. உண்மையான உலகம் நாம் விசுவாசத்தில் ஏற்றுக்கொள்ளுகிற காணப்படாத ஒன்று என்பதை எபிரெயர் தெளிவுபடுத்துகிறது என்பது வலியுறுத்தல் ஆகிறது (வசனம் 2); கிறிஸ்து "பிரதான ஆசாரியராக" (6:20) அல்லது "ஊழியராக" (8:2) இருக்கிற இதுதான் சாம்ராஜ்யம். தற்போதைய கூடாரம் "உண்மைக்கான" ஒரு "நிழல்" மட்டுமே (8:5; 9:24), ஆனால் அது நமக்கு ஒரு "பரலோக பட்டணத்தை" உறுதியளிக்கிறது (11:16).

**பரலோகங்கள்** என்ற வார்த்தையே இங்கு சரியானதாய் இருக்கும், ஏனென்றால் மூலமொழியான எபிரெய மொழியில் பத்தில் ஏழு இடங்களில் பன்மையிலேயே எழுதப்பட்டுள்ளது. எபேசியர் புஸ்தகத்தில் எல்லா இடங்களிலும் பன்மையிலேயே இருக்கின்றது. எபிரெயர் 9:23 ல் பன்மையாகவும், 9:24ல் ஒருமையாகவும் உள்ளது. ஒருவேளை நோக்கத்தோடு[2] குறிப்பிடப்பட்டு இருக்கலாம். பன்மையில் வரும் இடங்களில் தேவன் வாசம்பண்ணும் இடம் என்றும் அங்கு கிறிஸ்து அவரோடு இருக்கிறார் என்றும் குறிப்பதற்காக அப்படி இருக்கலாம்.

கிறிஸ்தவர் அல்லாத யூத மக்கள், தேவனை தங்கள் பிரதான ஆசாரியனாக வைத்து இருப்பதாக தங்களை மேன்மையானவர்களாக

கருதுகிறார்கள், கிறிஸ்தவர்கள் அவ்வாறு நினைக்காமல் இருப்பதும் அவர்கள் தாழ்த்தப்பட காரணமாக கூறலாம். எனினும், முதல் நூற்றாண்டில் தங்கள் பிரதான ஆசாரியர்களை அலட்சியத்தோடு பார்த்தனர். "துறவியருக்கே" என்ற வார்த்தை ஜோசஃபஸ் என்பவரால் சவக்கடல் சுருளை உருவாக்கிய கும்ரா சமூகத்தினருக்கு பெயராகசூட்டப்பட்டது. தேவன் இவர்களின் பிரதான ஆசாரியனை புறக்கணித்துவிட்டார் என்று நினைத்தார்கள். ஆனாலும்கூட, அவர்கள் கிறிஸ்தவர்களிடம், "எங்களிடம் தேவன் நியமித்த பிரதான ஆசாரியன்[3] உண்டு ஆனால் உங்களிடம் அவ்வாறு இல்லை" என்று கூறலாம் என்று நம்பினார்கள். மாறாக, அப்படியாராலும் கூறமுடியாது, காரணம் கிறிஸ்துவே நமக்கு தலையாகவும் கர்த்தரின் **வலதுபாரிசத்தில்** இருந்து நம்மை ஆட்சிசெய்பவராகவும் இருக்கிறார்.

**வசனம் 2.** கிறிஸ்து நமக்கு **மெய்யான கூடாரத்திலும் ஆசாரிய ஊழியம்** செய்பவர். "ஊழியம்" (λειτουργός, *லெய்ட்யர்கோஸ்*) என்ற வார்த்தைக்கு "ஆசாரிய ஊழியன்" என்று அர்த்தம். "கூடாரம்" என்ற வார்த்தை பரலோகத்தைக் குறிக்கிறது. உண்மையான "மகா பரிசுத்த ஸ்தலம்," அங்கு தேவனுடைய பிரசன்னத்தில் கிறிஸ்து நமக்கு ஊழியம் செய்கிறார். உலகத்தில் இருந்த பிரதான ஆசாரியன், பரிசுத்தமான பரலோகத்தில் இருக்கும் பிரதான ஆசாரியரின் நிழல் அல்லது அடையாளம் என்றே கூறலாம். **மெய்யான** என்றால் நிழலின் நிஜ உருவத்தை குறிக்கிறது. அது பொய் என்பதின் எதிர்ச்சொல் அல்ல. மெய்யான **கூடாரம்** (σκηνή, *ஸ்கேனெ*) பரலோகத்தையே குறிக்கிறது. இஸ்ரவேல் ஜனங்களால் தேவன் வாசம் செய்ய செய்யப்பட்ட கூடாரம் புதிய உடன்படிக்கையில் நமக்கு இருக்கும் ஆசீர்வாதங்களின் மாதிரி (வசனம் 5). அந்த கூடாரம், வெளிப்படுத்தின சுவிசேஷம் 8:3-5-ல் "பலிபீடம்" என்றும், வெளிப்படுத்தின சுவிசேஷம் 11:19ல் "ஆலயம்" என்று கூறப்பட்டுள்ளது. கூடாரம் ஆலயமாக மாறினாலும், எபிரெய ஆக்கியோன் அதை "கூடாரம்" என்றே கூறுகிறார்.

இந்த கூடாரம் **தேவன் கட்டினது, மனிதன் அல்ல**. இது ஒருவேளை ஆலயத்தின் மாதிரியாகவும் இருக்கலாம். அந்த சபை கிறிஸ்துவால் கட்டப்பட்டது, மனிதனால் அல்ல. தேவன் கட்டின ஆலயத்திற்கும் மனிதன் கட்டின ஆலயத்திற்கும் உள்ள முக்கியமான வேறுபாடு என்னவென்றால், புதிய ஏற்பாட்டில் சபை "இராஜ்ஜியத்திற்கு" ஒப்பிடப்படுகிறது (வெளி. 1:9-11). இயேசு, கர்த்தரின் சபையைக் கட்டுவதைக் குறித்துப் பேசியவுடன் "இராஜ்ஜியத்தைக்" குறித்துப் பேசுகிறார் (மத். 16:18, 19). இரண்டும் அர்த்தங்களில் வேறுபட்டாலும், ஒரே சரீரத்தின் அவயவங்களாக பார்க்கும் போது இரண்டும் ஒரே அர்த்தங்களையே கொண்டிருக்கிறது (கொலோ. 1:13, 18). "சபை" (ἐκκλησία, *எக்ளேஷிய*) என்பது தேவனுடைய "கூடுகை" (அப். 19:39, 41ல் கூறப்பட்டுள்ளதற்கான சரியான மொழிபெயர்ப்பு உலகப் பிரகார

கூடுகை). இது தேவனின் அநந்தஞானம் விளங்க பரலோகத்தில் நியமிக்கப்பட்டது (எபே. 3:10). கூடாரத்தின் பரிசுத்த ஸ்தலம் சபையின் அடையாளமானால், சபை பரலோகத்தின் அடையாளமாக இருக்கலாமே. ஒரு வேளை இதனால் தான் இது “பரலோக இராஜ்ஜியம்” என்று பல முறை குறிப்பிடப்படுகின்றது (மத்தேயு புஸ்தகத்தில் 32 முறை குறிப்பிடப்பட்டுள்ளது). கூடாரத்தின் பரிசுத்த ஸ்தலத்திற்கும் மகா பரிசுத்த ஸ்தலத்திற்கும் உள்ள ஒற்றுமையே சபைக்கும் பரலோகத்திற்கும் உள்ளது.

கூடாரத்தின் முறைமைகளும் சபையின் முறைமைகளும் ஒத்திருக்கின்றது. அது கூடாரத்தின் மேஜை, பலிபீடம், மற்றும் குத்துவிளக்கும் உள்ளடங்கும். வாரந்தோரும் ஆசாரியர்கள் கூடாரத்தின் மேஜையில் இருக்கும் அப்பத்தை புசித்தார்கள், புதிய ஏற்பாட்டில் சபை வாரத்தின் முதல் நாளில் அப்பம் பிட்கும்படி கூடினார்கள் (அப். 20:7). பலிபீடத்தில் இருந்து புறப்பட்ட சுகந்த வாசனை நமது ஜெபங்களுக்கும் துதி பாடல்களுக்கும் ஒப்பிடப்படும் (எபி. 13:15 காண்க; வெளி. 8:4ல் உள்ள தொடர்பைக் காண்க). ஏழு குத்துவிளக்கின் ஒளி தேவனின் வார்த்தையின் ஒளிக்கு ஒப்பாகக் கூறலாம் (சங். 119:105). புதிய ஏற்பாட்டின்படி நாம் தேவனின் வார்த்தையின் ஒளியிலே நடக்கிறோம், அதுவே நம்மை நடத்திச் செல்கிறது (மத். 5:14; 1 யோவான் 1:7). 1 கொரிந்தியர் 3:16ல் கிறிஸ்தவர்கள் தேவனின் ஆலயமாக (தேவன் வாசம் செய்யும் இடம்) இருக்கிறார்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆகையால், சபையே “மெய்யான கூடாரம்” அல்லது பழைய ஏற்பாட்டின் கூடாரத்தைப் போல தேவன் தங்கும் இடம்.

### ஏதோ ஒரு காணிக்கையோடு ஒரு ஆசாரியன் (8:3, 4)

**3 ஒவ்வொரு பிரதான ஆசாரியனும் காணிக்கைகளையும் பலிகளையும் செலுத்தும்படி நியமிக்கப்படுகிறான்; ஆதலால் செலுத்தும்படிக்கு ஏதோ ஒன்று இவருக்கும் அவசியம் வேண்டியதாயிருக்கிறது. 4 பூமியிலே அவர் இருப்பாரானால் ஆசாரியராயிருக்கமாட்டார்; ஏனெனில் நியாயப்பிரமாணத்தின்படி காணிக்கைகளைச் செலுத்துகிற ஆசாரியர்கள் இருக்கிறார்களே.**

**வசனம் 3.** எபிரெயர் 5:1 கூறுகிறது பரிகாரமான பலிகளின் மூலம் மக்களின் பாவங்களைத் தீர்ப்பதே ஆசாரியர்களின் செயல்பாடு ஆகும். ஆயினும், இந்தக் **காணிக்கைகளையும் பலிகளையும் செலுத்தும்படிக்கு** மனிதன் நியமிக்கப்படவேண்டும். எப்போது நம்முடைய **பிரதான ஆசாரியர்** பலி செலுத்துவார் என்பது சரியாகப் பின்பு குறிப்பிடப்பட்டுள்ளது (9:14), இது கிட்டத்தட்ட ஆசிரியர் ஒரு காரியத்தைச் சொல்வதற்கு முன்பு ஆர்வத்தைத் தூண்டுவதாக

இருக்கிறது. பூலோக பலிபீடத்தில் பலி செலுத்துவதற்கு மோசேயின் பிரமாணத்திற்குக் கீழ்ப்படியும் விதமாக யூத ஆசாரியர்களால் நிரப்பப்பட்டிருந்தபடியால், பூலோக ஆசாரியராக இயேசு பலி செலுத்த இடமில்லாமல் இருந்திருக்கலாம் (வசனம் 4; காண்க 7:12-14). “இயேசு தமது ஊழியத்தின் போது, ஆசாரிய பணியை ஏன் செய்யவே இல்லை என்பதற்கு இந்த வசனம் மிக நீளமான விளக்கத்தைக் கொடுக்கிறது.”[5] ஒரு நேரத்தில் ஒரே ஒரு ஆசாரியத்துவம் செயல்படுத்துவதற்கு மட்டுமே தேவன் அனுமதித்துள்ளார், ஒரே பிரமாணத்தின் கீழ் ஒரே நேரத்தில் அவர் இரண்டு ஆசாரியத்துவத்தைக் கொண்டிருந்ததில்லை. தேவன் தமது ஜனத்துடன் ஒருபோதும் இரண்டு உடன்படிக்கைகளை ஏற்படுத்தவில்லை. (இது 7:13, 14-ல் இது அமைதியிலிருந்து வரும் விவாதம் ஆகும்.)

**வசனம் 4. பூமியிலே அவர் இருப்பாரானால் ஆசாரியராயிருக்கமாட்டார்.** இயேசு பரலோகத்தில் சேவை செய்கிறார், இது அவருடைய மேன்மையில் உள்ள வேறுபாட்டைக் காண்பிக்கிறது. அவர் லேவியின் கோத்திரமோ, அல்லது ஆரோனின் குடும்பத்தையோ சார்ந்தவர் அல்ல (7:14), ஆசாரியத்துவத்தைப் பொறுத்தவரை அவர் ஆசாரியரல்லாதவர். உண்மையில், பரலோகத்திலுள்ள சன்னிதானத்தில் சேவை செய்கிற ஒருவருக்கு முன் பூலோக கட்டமைப்பிலுள்ள ஒரு ஆசாரியன் தாழ்வானவனாக உள்ளான்.[6] பூலோக பரிசுத்தஸ்தலம் இனிமேல் தேவனுடைய வாசஸ்தலம் இல்லை.

இயேசு சிலுவையில் தன்னைப் பலியாகசெலுத்திய போது அது பரலோகத்தில் காணிக்கையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. நியாயப்பிரமாணத்தின்படி **காணிக்கைகளையும்** மற்றும் **பலியையும் செலுத்தும்** பூமியில் ஆசாரியராக அவரால் இருக்க முடியாது. ஆகையால், கிறிஸ்து பரலோகம் திரும்பும் வரை, அதாவது அதுவரை மனுக்குலத்தின் மீட்பின் அர்த்தமானது சட்டப்பூர்வமாக நிறைவேற்றப்படாதவரை, இராஜ்ஜியம்/சபை ஒருபோதும் ஸ்தாபிக்கப்பட முடியாது (எபே. 5:25). அவர் இன்னமும் பலி செலுத்துகிறார் என்று அர்த்தமல்ல (பிலிப்பு அர்த்தத்தையே மாற்றியதுபோல்), அவருடைய பலியானது ஒரேதரம் செய்து முடிக்கப்பட்டது (7:27; 9:28). அவருடைய ஒரேதரம் பலியானது நம் பாவங்களில் இருந்து நமக்கு தொடர்ந்து நிலையான சுத்திகரிப்பை உண்டுபண்ணுகிறதாக இருக்கிறது (1 யோவான் 1:7). இது காலங்களைக் கடந்து செயல்படக்கூடிய வல்லமை கொண்டது, மற்றும் கிறிஸ்துவின் மூலம் தேவனிடம் வருபவர்களைத் தொடர்ந்து இரட்சிக்கக்கூடியதாக இது உள்ளது (7:25).

ஆசாரியன் மட்டுமே பலி செலுத்துவான் என்பதைக் கருத்தில் கொள்ளவும். இயேசு பாவத்திற்கான ஒரேதரம் பலியை

உண்டுபண்ணினார் இந்த நவீனகால ஆசாரியர்களால் இது கூடாத காரியமாக இருக்கிறது. கூடுதல் பலிகள் மிதமிஞ்சினதாயிருக்கும். ஒவ்வொரு நாளும் அவருக்காக வாழ்வது மூலம், இராஜாவுக்குச் சேவை செய்வதில் நம்முடைய வாழ்வை சொந்த பலியாகச் செலுத்துவதே நாம் இன்று செய்யும் பலியாக உள்ளது (ரோமர் 12:1, 2).

### மாதிரியின் படியிலான ஒரு ஆசாரியர் (8:5)

**5இவர்கள் செய்யும் ஆராதனை பரலோகத்திலுள்ளவைகளின் சாயலுக்கும் நிழலுக்கும் ஒத்திருக்கிறது; அப்படியே, மோசே கூடாரத்தை உண்டுபண்ணுகையில் மலையிலே உனக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின்படியே நீ எல்லாவற்றையும் செய்ய எச்சரிக்கையாயிரு என்று தேவன் அவனுக்குக் கட்டளையிட்டார்.**

**வசனம் 5** லேவிய ஆசாரியர்கள் செய்யும் ஆராதனை **பரலோகத்திலுள்ளவைகளின் சாயலுக்கும் நிழலுக்கும் ஒத்திருக்கிறது**. பிரமாணத்தைப் பற்றிக்கொண்டிருக்கிறபடியால், கீழானவைகளையும் மற்றும் அழிந்துபோகிறவைகளையும் அவர்கள் சார்ந்திருக்கிறார்கள். சீனாய் மலையில் **மோசேக்கு** காண்பிக்கப்பட்டதும், சில காரியங்கள் பரலோகத்தில் **தேவனுடைய** வாசஸ்தலத்திற்கு ஒத்திருக்கிறது. இது ஆசிரியர் இரண்டு உலகத்தைக் குறித்துப் பேசுவது போல் உள்ளது, உண்மையான உலகம் மேலே இருக்கிறது ஆனால் பூமியிலுள்ளவைகள் அனைத்தும், அவைகளின் நகலாக, இருக்கிறது என்று குறிப்பிடுகிறார். "நிழல்" என்பது தெளிவற்றதும் மற்றும் வெளிவரைவும் ஆகும், ஆனால் உண்மைப் பொருள் அல்ல. கொலோசெயர் 2:16, 17-ல் பிரமாணத்தைக் குறித்துப் பவுலும் இதேபோன்றதொரு கூற்றைக் கூறுகிறார் (காண்க எபி. 10:1, 2). ஓய்வுநாளையும் சேர்த்து மோசேயின் பிரமாணமானது வரப்போகிற காரியங்களின் நிழலாயிருக்கிறது. "நிழலான" காரியங்கள் என்பது சம்பிரதாயச் சட்டங்கள் மட்டும், அவைகள் சடங்காச்சாரங்கள் என்று வர்ணிக்கப்பட்டுள்ளன என்று சிலர் வரையறுக்க முயற்சிக்கின்றனர். ஆனால் அவ்வாறாக எந்த ஒரு வித்தியாசமும் வசனங்களில் குறிப்பிடப்படவில்லை. இரண்டு வார்த்தைகளாக இருக்கலாம் அவை "ஒன்றாக இணைக்கப்பட வாய்ப்பு உள்ள தெளிவற்ற நகல் அல்லது பரலோகத்தின் உண்மையைக் குறித்த கருத்து அல்லது குறிப்பு."[7]

மோசேயுக்கு கொடுக்கப்பட்ட **வரைபடத்தின்படி** சரியாக, **ஆசரிப்புக்கூடாரத்தை** அதன் சாதனங்களாலும் மற்றும் அலங்காரங்களாலும் இஸ்ரவேலர்கள் அமைக்க வேண்டியதாயிருந்தது (யாத். 25:40). இதன் விளைவாக, எருசலேமிலுள்ள ஆலயமும் இது போன்றே இருந்தது. அப்போஸ்தலர் 7:44-ல் ஸ்தேவானும் இதே கருத்தை முக்கியப்படுத்துகிறார் மற்றும் "மாதிரி" அல்லது "உதாரணம்"

என்ற அர்த்தம் கொண்ட (*டுபோஸ்*) τύπος "முறைமை" என்ற வார்த்தையையும் முக்கியப்படுத்துகிறார்.[8] தனது விருப்பப்படியும் மற்றும் தனக்குச் சிறந்ததாகத் தோன்றும்படியும் ஆசரிப்புக்கூடாரத்தை அமைக்க மோசேக்கு உரிமையில்லை. புதிய உடன்படிக்கையின் கீழ் நம்முடைய கீழ்ப்படிதலிலும் மற்றும் புதிய ஆலயமாகிய சபையில் உறுப்பினராவதிலும் நாம் குற்றமற்றவறாக இருக்க முடியுமா? இந்தக் கேள்விக்கான பதில் எபிரெயர் 2:1-3-ல் உள்ளது, "அவைகளை மிகுந்த ஜாக்கிரதையாய்க் கவனிக்கவேண்டும்." பேழையைக் கட்டுவதில் நோவா கட்டுப்படுத்தப்பட்டிருந்தான், அவன் முற்றிலும் கீழ்ப்படிந்திருந்தான். புதிய உடன்படிக்கையின் கீழ் கட்டுப்பாடுடனும் மற்றும் கவனமாகக் கீழ்ப்படிய வேண்டும் என்ற யோசனையைக் கேலி செய்பவர்கள், "புதிய ஏற்பாடு ஒன்றும் சட்டப் புத்தகம் இல்லை. இது ஒரு அன்புக் கடிதம், பின்பற்றுவதற்கு எந்த ஒரு முறைமையும் கிடையாது" என்று சொல்லுவார்கள். ஆம், தேவனுடைய வார்த்தை கேள்விகள் மற்றும் பதில்கள் என்ற வரிசையில் விளக்கம் கொண்ட சட்டப் புத்தகமாக எழுதப்படவில்லை. மாறாக, இந்தப் புத்தகம் இலக்கியம், விரிவுரைகளும், பாடல்களும், உருவகப் பகுதிகளுமாக அழகான வகைகளைக் கொண்டுள்ளது. புதிய ஏற்பாடு "விதிமுறைகள்" என்று அழைக்கப்படும் அறிவுரைகளைக் கொண்டுள்ளது என்று வேதாகமத்தை உண்மையாக வாசிப்பவர்கள் மறுக்கமாட்டார்கள்.[9] ஜிம்மி அலன் சுருக்கமாகச் சொன்னார், "ஒரு தலைப்பைக் குறித்து முழு புதிய ஏற்பாடும் சொல்வதே, இன்றைய முறைமையாகும்."[10]

மோசே **எச்சரிக்கப்பட்டான்**, (χρηματίζω, *கிரேமாட்டிஸ்சோ*) என்பதை "தெய்வீக எச்சரிக்கை" என்றும் கருத முடியும். என்.கே.ஜெ.வி சொல்கிறது. தெய்வீக எச்சரிக்கை மத்தேயு 2:12-லும் எபிரெயர் 11:7-லும் இதே வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது மற்றும் தெய்வீக அறிவுரை என்று அப்போஸ்தலர் 10:22-ல் பயன்படுத்தப்பட்டுள்ளது. **மாதிரியின்படி** என்பது மோசே **மலையில்** இருக்கும்போது அவருக்கு கொடுக்கப்பட்ட திட்டத்தை குறிக்கிறது. முறைமை (τύπος, *டுபோஸ்*) என்பதற்கு உண்மையான அர்த்தம் என்னவென்றால் "அச்சு" மற்றும் "அச்சிடப்படல்,"[11] உலோக அச்சினால் அச்சிடப்படுதல் அல்லது ரப்பர் ஸடாம்பினால் அச்சிடப்படுதல் என்பதாகும். பிள்ளைகள் பெற்றோரின் *டுபொய்* (*டுபோவின்* பன்மை அல்லது "அதேமாதிரி") என்று அழைக்கப்பட்டனர். மோசேக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியானது கண்ணால் பார்க்கக் கூடியதாயிருந்தது (யாத். 25:40). "அளவு மாதிரியான சன்னிதானம் போன்று முன்பே இருக்கிற பரலோகத்தின் அசலின் நகலை"[12] அவர் கண்டிருக்கலாம். ஃப்லோ குறிப்பிடுவது போல, "பரிபூரணமாக்கப்பட இருக்கிற ஆத்துமா [காணமுடியாத] சரீரங்களின் மாதிரியைத் தம் ஆத்துமாவில் சிந்தித்தவராயிருந்தார்."[13] ஆசரிப்புக் கூடாரத்தின் விசேஷங்களையும், ஆவிக்குரிய

அர்த்தங்களையும் கற்றுக்கொள்வது மூலம் பரலோகம் எப்படிப்பட்டது என்பதை நாம் அறிந்து கொள்ள முடியும் என்று நிச்சயமாக அர்த்தப்படுகிறது. பரலோகத்தில் தேவனுடைய மாதிரியை, மோசே கண்டதுபோல், ஆசரிப்புக்கூடாரத்தின் வெளிவரைவாக அவருடைய அதிகாரப்பூர்வ திட்டமாக இருந்தது. பரலோகத்தின் அடையாளமாக இருக்கும் சபையானது எப்படி இருந்திருக்க வேண்டும் என்பதன் அடையாளமாக இது இருக்கிறது. சபையைப் பற்றிய விவாதங்களில் அது ஒரு கட்டிடத்தைக் குறிப்பிடுவது இல்லை. பூமியிலுள்ள சபையானது பரலோக வாசஸ்தலங்களுக்கு இணையாக உள்ளது, அங்கே நாம் "அவருடன் வீற்றிருக்கிறோம்" (எபே. 1:3; 2:6; காண்க எபி. 9:23).

## அவருடைய புதிய உடன்படிக்கை (8:6-13)

புதிய உடன்படிக்கை மற்றும் அனைத்து உடன்படிக்கைகளின் உன்னதத்திற்கும் அவர் மத்தியஸ்தரானபடியால், இயேசுவின் ஊழியமானது எல்லா ஊழியத்திற்கும் உன்னதமாயிருந்தது. பழைய உடன்படிக்கையானது "பரலோகத்தின் நகல் அல்லது நிழலாக இருந்தது." இது அதிகாரப் பூர்வமானதும் மற்றும் தேவனுடைய வடிவமைப்பாகவும் இருந்தது, ஆனால் அதன் உச்சக்கட்ட செயல்பாடானது புதிய உடன்படிக்கையைச் சுட்டிக்காட்டுகிறது அது கிறிஸ்துவின் மரணத்திலிருந்து விளைகிறதாயிருக்கிறது.

எபிரெயர் 8:6-13, புதிய உடன்படிக்கையின் முதன்மையான குணாதிசயங்களை நமக்கு முன்பு கொண்டுவருகிறது. அவையாவன?

### விசேஷித்த வாக்குத்தத்தங்களுடன் ஒரு உடன்படிக்கை (8:6, 7)

**6 இவரோ விசேஷித்த வாக்குத்தத்தங்களின்பேரில் ஸ்தாபிக்கப்பட்ட விசேஷித்த உடன்படிக்கைக்கு எப்படி மத்தியஸ்தராயிருக்கிறாரோ, அப்படியே முக்கியமான ஆசாரிய ஊழியத்தையும் பெற்றிருக்கிறார்.**
**7 அந்த முதலாம் உடன்படிக்கை பிழையில்லாதிருந்ததானால், இரண்டாம் உடன்படிக்கைக்கு இடம் தேடவேண்டுவதில்லையே.**

**வசனம் 6.** முதலாவது, **புதிய உடன்படிக்கையானது விசேஷித்த வாக்குத்தத்தங்களைக்** கொண்டுள்ளது. இந்த வசனம் விசேஷ குறிப்புகளைக் கொண்டுள்ளது, இது எபிரெயரின் முதல் முக்கியக் கருப்பொருளின் நிறைவாக இருக்கிறது: அதாவது இயேசுவின் இரத்தத்தினால் சுத்திகரிக்கப்பட்ட புதிய ஏற்பாடு மேன்மையானதாக இருக்கிறது, மற்றும் அது பழைய ஏற்பாட்டின் இடத்தையும் எடுத்துக்கொள்கிறது. ஆசிரியர் இந்தப் புதிய உடன்படிக்கையைக்

குறித்து மேலும் கூறுகையில் ஒரே ஒரு பழைய ஏற்பாட்டுப் பகுதியானது இந்தப் புதிய உடன்படிக்கையைக்குறித்து (எரே. 31:31-34) குறிப்பிடுகிறது என்று காட்டுகிறார்.

நம்முடைய மத்தியஸ்தராகிய இயேசு கிறிஸ்து, மென்மேலும் "விசேஷித்த வாக்குத்தத்தத்துடன்" "விசேஷித்த உடன்படிக்கையை" வழங்கினார். முதல் உடன்படிக்கைக்குக் கீழ் விலங்குகளின் பலிக்கு மேலாக வாழ்க்கையைப் பலியாகக் கொடுத்ததன் மூலம் வலியுறுத்தப்பட்டுள்ளது. **விசேஷித்த உடன்படிக்கையின் மத்தியஸ்தராக** ஆண்டவர் இயேசு இருக்கிறார் என்பதைத் தர்க்க பூர்வமாகவும் மற்றும் வசனத்தின் ஆதாரத்துடனும் எபிரெய ஆசிரியர் பயன்படுத்துகிறார். KJV-யில் உடன்படிக்கை (διαθήκη, *டையதிகெ*) என்னும் வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது அதுவே எபிரெயர் 9:16, 17; மற்றும் மத்தேயு 26:28-ல் ஏற்பாடு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் பயன்பாட்டிலிருந்து நாம் "புதிய ஏற்பாடு" என்னும் தலைப்பைப் பெற்றுள்ளோம். இந்தப் பகுதி எரேமியா 31-ல் "புதிய" உடன்படிக்கை அல்லது ஏற்பாடு என்பதற்கான முக்கியப் பின்னனி பகுதியாக உள்ளது.

மத்தியஸ்தர் என்னும் வார்த்தை (μεσίτης, *மெசிடிஸ்*) மத்தியில் நிற்கிறவரைக்குறிப்பிட முதலாம் நூற்றாண்டில் அன்றாட வணிகத்தில் பயன்படுத்துவது வழக்கம். இப்படிப்பட்ட நபர் பொதுவானர், நடுநிலையாளராக இருக்கிறார்.[14] பழைய உடன்படிக்கைக்குக் கீழ் மோசே மத்தியஸ்தராக இருந்தார் (கலா. 3:19-ஐ காண்க), இன்றைய காலத்தில் நம்முடைய ஒரே மத்தியஸ்தராக இயேசு கிறிஸ்து இருக்கிறார் (1 தீமோ. 2:5). பிதாவிடம் கிட்டிச் சேருவதற்குப் பரிசுத்தவான்கள் மூலமோ, மரியாள் மூலமோ, தேவதூதர்கள் மூலமோ அல்லது வேறொருவர் மூலமோ போவது அநாவசியமானதாக இருக்கிறது!

**வசனம் 7.** கிறிஸ்துவின் ஊழியமானது "பரலோக காரியங்களுடன்" புதிய உடன்படிக்கையான சபை மற்றும் உண்மையான மன்னிப்பு ஆகியவைகளைச் சார்ந்ததாக இருக்கிறது (வசனம் 5). பழைய **உடன்படிக்கை** பாவத்தைக் குறித்து அதிகம் பேசுகிறதாக இருக்கிறது, ஆனால் அது உண்மையாகவோ அல்லது முழுமையாகவோ பாவ மன்னிப்பை வழங்கவில்லை. ஆகையால் பிரமாணம் **குற்றமற்றதாகக்** காணப்படவில்லை (ரோமர் 8:3-ஐ காண்க). இயேசு "மிகவும் அருமையான" ஊழியத்தை வழங்குகிறார். முன்னேற்றங்களின் விளக்கம் 8:8-12-ல் உள்ளது. புதிய உடன்படிக்கை என்பது உண்மையான பாவத்திலிருந்து மன்னிப்பு ஆகும், ஆனால் பழைய உடன்படிக்கை சம்பிரதாயச் சுத்திகரிப்பைப் பற்றியதாக உள்ளது. பழைய உடன்படிக்கையின் வாக்குத்தத்தங்கள் இந்த வாழ்க்கைக்குரியது, ஆனால் புதிய உடன்படிக்கையின்

வாக்குத்தத்தங்கள் வருங்கால வாழ்க்கைக்குரியது ஆகும். கீழ்ப்படிதலுக்குப் பழைய உடன்படிக்கை தேசத்தில் நீடிய வாழ்வு, பலுப்பெருகுவீர்கள், அதிகமான அறுவடை, தேசிய ஆசீர்வாதங்கள், சமாதானம், மற்றும் செல்வம் அகியவற்றை உறுதிப்படுத்துகிறது. இவைகளுக்கு மேலாக, புதிய ஏற்பாடு வழங்குவது நித்தியஜீவன், அது பழைய ஏற்பாட்டில் ஒரு சிறு குறிப்பாக மட்டுமே உள்ளது. பழைய உடன்படிக்கை "குற்றமற்றதாக" இருந்திருக்குமானால், புதிய அல்லது மேலான உடன்படிக்கை நமக்கு அவசியமற்றதாக இருக்கும்.

**புதிய உடன்படிக்கையானது பழைய உடைந்துபோன உடன்படிக்கையைப் போன்றது அல்ல (8:8, 9)**

**8அவர்களைக் குற்றப்படுத்தி, அவர்களை நோக்கி: இதோ, கர்த்தர்சொல்லுகிறதென்னவெனில்: இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் நான் புது உடன்படிக்கையை ஏற்படுத்துங்காலம் வருகிறது. 9அவர்களுடைய பிதாக்களை எகிப்துதேசத்திலிருந்து கொண்டுவரும்படிக்கு நான் அவர்களுடைய கையைப் பிடித்தநாளிலே அவர்களோடு பண்ணின உடன்படிக்கையைப்போல இது இருப்பதில்லை; அந்த உடன்படிக்கையிலே அவர்கள் நிலைநிற்கவில்லையே, நானும் அவர்களைப் புறக்கணித்தேன் என்று கர்த்தர்சொல்லுகிறார்.**

**வசனம் 8.** இரண்டாவதாக, **புதிய உடன்படிக்கையானது** தேவனுடைய ஜனங்களால் மீறி அவமாக்கிப் போடப்பட்ட பழைய உடன்படிக்கையைப் போன்று அல்ல. யூத விசுவாசிகளுக்கு அவர்களுடைய சொந்த பரிசுத்த வசனங்களிலிருந்து கேள்வி மட்டுமே கேட்க முடியும், மனதார வேறு தர்க்கங்களை ஆசிரியர் பயன்படுத்த முடியாது. சீனாய் மலையில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையை நிராகரித்த வகையில் பிரமாணத்திற்குக் கீழாக இருந்த தனது ஜனங்கள் உண்மையற்றவர்களாக இருந்ததை எரேமியா குறிப்பிடுகிறார். இஸ்ரவேல் தேசத்திற்கு முடிவு வந்ததற்குத் தேவனுடைய பிரமாணத்தை நிராகரித்ததை முதல் காரணமாக அவர் அறிந்து கொண்டார். உண்மையில், பிரமாணம் குறைவுள்ளதாக இருக்கும்படிக்கு தேவன் உருவாக்கினார், பின்பு அதிலுள்ள குறைகள் சுட்டிகாட்டப்பட்டது, ஆனால் ஆதிகாலத்து இஸ்ரவேலர்களிடமும் குறைவு இருந்ததைக் கண்டுபிடித்துள்ளார்.

**இஸ்ரவேல் குடும்பத்திற்கும்** மற்றும் **யூதாவிற்கும்** புதிதாக ஒரு உடன்படிக்கை கொடுக்கப்பட்டது, இருவரும் ஒரே ஜனங்களாக இணைய வேண்டியது இருந்தது. ஒரே சரீரமாகிய சபை உருவாக்கப்படும்போது இது சம்பவிக்கும் (எபே. 2:14-16). தேவன்

பிரிவினையை விரும்பவில்லை, தமது அனைத்து ஜனங்களும் ஒரே சரீரமாகவும் மற்றும் ஒரே சபையாகவும், “ஆவிக்குரிய இஸ்ரவேல்” (கலா. 6:16) இருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார் (எபே. 1:22, 23). பிரிவினை குழுக்கள், சண்டை, கசப்புணர்வு, மற்றும் சாத்தானுக்கு வேலை செய்தல் போன்றவை இவைகளால் உருவாக்கப்படுகின்றன மற்றும் உலக மனந்திரும்புதலுக்கு எதிராகப் பெரிய முடக்கத்தை உருவாக்கியுள்ளது என்பதை அவர் அறிவார் (காண்க யோவான் 7:20, 21). பிரிவினை குழுக்கள் மற்றும் பிரிவுகள் அனைத்தையும் நீக்குவதே புதிய உடன்படிக்கையின் நோக்கம்.[15] பழைய உடன்படிக்கை பூரணமாக இருந்திருக்குமானால், புதிய உடன்படிக்கை கொண்டுவருவதில் எந்த ஒரு முகாந்திரமும் இல்லை என்பதைக் காண்பிக்கும் விதமாகப் புதிய உடன்படிக்கை குறித்த தீர்க்கதரிசனம் காண்பிக்கிறது.

வசனம் 8ல் எரேமிய மூலமாக வந்த புதிய உடன்படிக்கையின் வாக்குறுதி அதன் மூலத்தை மேற்கோள் காட்டுவதைக் காட்டிலும் அதன் குணாதிசயத்தைக் காட்டுகிறது என்று **கர்த்தர் சொல்கிறார்** என்று **ஆசிரியர் கூறுகிறார்** என் கிரேக்க பதத்தில் குறிப்பாகக் காணப்படவில்லை. ஆனால் பொதுவாகத் தேவனுடைய சார்பாகப் பேசுகிறவாகள் தேவன் சொன்னார் என்றே சொல்வார்கள். எரேமியா 31:31-34 வரையுள்ள தீர்க்க தரிசனமானது எபிரெயர் 8:8-12 வரையில் மேற்கொள் காட்டப்பட்டுள்ளது. பாபிலோனில் யூதா சிறையிருப்பில் துன்பப்படும் போது இச் செய்தி சொல்லப்பட்டது. மக்கள் தம் தாய் நாடு திரும்ப இயலுமா என எண்ணிக் கொண்டிருக்கையில் அவர்களுக்கு நம்பிக்கைக் கொண்டிருக்கையில் அவர்களுக்கு நம்பிக்கை கொடுக்கப்பட்டது (எரே. 31:17) அவர்கள் சொந்த நாடு திரும்பி அவர்கள் புதிய மற்றும் சிறந்த உடன்படிக்கையையும் பெறுவார்கள் என்பதே.

பிரமாணத்தைத் திரும்பப்பெற யோசியா இராஜா ஒப்புக்கொடுத்துள்ளார் என்றாலும் கூட (2 இராஜா. 23:3), ஜனங்கள் நீதியின் மாதிரியை பின்பற்றவில்லை என்பதை எரேமியா புரிந்துகொண்டார் (எரே. 3:6-10). தேசீய பிரதிநிதித்துவம் இல்லாத நிலையில், ஜனங்களோடு செயல்படும்படிக்கு புதிய உடன்படிக்கை வேறுவிதமான வழியை வழங்குகிறது. நியாயப்பிரமாணத்தை குறைவுள்ளதாக தேவன் ஏற்படுத்தியிருக்கிறார் (ரோமர் 8:3), நியாயப்பிரமாணத்தின்படி பூரணமான வாழ்க்கையை வாழ தேவையான தாக்கத்தை யூதர்களுடைய வாழ்கை தோல்விகள் கொடுத்திருக்கும்.

புதிய உடன்படிக்கையானது “இஸ்ரவேலின் குடும்பம்” மற்றும் “யூத குடும்பத்திற்குமாக” ஏற்படுத்தப்பட்டுள்ளது. வேதாகமத்தின் அடிப்படையில் நான்கு வழிகளில் “இஸ்ரவேல்”

பயன்படுத்தப்பட்டுள்ளது:[16]

1. தேவனுடைய இராஜகுமாரனாக யாக்கோபுவுக்கு (ஆதி. 32:28).
2. யாக்கோபின் எல்லாச் சந்ததிகளுக்கும் (யாத். 4:22).
3. யெரொபெயாமின் கீழ் கலகம் பண்ணின பத்துக் கோத்திரங்களுக்கு (1 இராஜா. 12:19, 20).
4. புதிய உடன்படிக்கையின் கீழ் ஒவ்வொரு கிறிஸ்தவர்களுக்கும் (ரோமர் 9:6; கலா. 6:16), இந்த உடன்படிக்கை எல்லா இஸ்ரவேருக்கும் வழங்கப்பட்டுள்ளது (எல்லா யூதர்களுக்கும்), ஆனால் அதை ஏற்றுக்கொள்ளுகிற எல்லாத் தேசங்களுக்கும் மற்றும் மக்கள் அனைவருக்கும் பொருந்தும்.

புதிய உடன்படிக்கையின் கீழ் "இஸ்ரவேல் வீட்டார்" "தேவனுடைய வீட்டார்" ஆனார்கள் (கலா. 6:16). எபிரெயரில் இது விசேஷமாக எங்கும் குறிப்பிடப்படவில்லை என்றாலும்கூட, அனைத்து மனுக்குலத்தையும் சேர்ந்ததே ஆகும். யூத கிறிஸ்தவர்கள் மத்தியில் இருந்து பாரபட்சங்களை ஆசிரியர் அறிந்த படியினால் இவ்வாறு எழுதியிருக்கலாம். புதிய உடன்படிக்கையை ஏற்படுத்தும் விதமாக இரத்தம் சிந்தப்பட்டுள்ளது என்று இயேசு சொன்னார் (மத். 26:28). பின்பு, இது அகில உலகத்திற்கும் பிரசங்கிக்கப்பட வேண்டும் என்று அவர் அறிவித்தார் (லூக். 24:46, 47; மாற்கு 16:15; மத். 28:18-20).

யூதா என்பதன் பொருள் "துதி" அல்லது "அவர் துதிக்கப்படத்தக்கவர்." இது முதலாவது லேயாள் மூலம் வந்த யாக்கோபின் பிள்ளையைக் குறிக்கும் (ஆதி. 29:35), பின்பு எல்லாச் சந்ததிகளுக்கும் அல்லது கோத்திரங்களுக்கும் (எண். 1:7); அடுத்ததாக ரெகொபெயாமைப் பின்பற்றுகிற சிமியோன் மற்றும் தாண், யூதா மற்றும் பென்யமீனுக்கும் இது பொறுந்தும். சிறையிருப்பிற்குப் பின்பு "யூதர்" (*யூ*-தா என்பதிலிருந்து வந்தது) என்னும் பெயர் இஸ்ரவேலின் எந்தக் கோத்திர ஜனங்களையும் மதத்திற்கு மாறியவர்களையும் குறிக்கும். இது பவுல் மூலமாக எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் பிரயோகப்படுத்தப்பட்டது (ரோமர் 2:29). அவருடன் புதிய உடன்படிக்கையின் உறவுக்குள் நுழைந்து அவருக்குக் கீழ்ப்படிகிற எல்லா தேவனுடைய பிள்ளைகளையும் எரேமியாவின் தீர்க்கதரிசனம் குறிப்பதாக அதன் வெளித்தோற்றம் காண்பிக்கிறது.

**வசனம் 9.** தேவன் **தமது கரத்தால்** (இஸ்ரவேலை) **கைப்பிடித்த நாளிலே** பழைய **உடன்படிக்கை** கொடுக்கப்பட்டிருந்தது. ஒரு தகப்பன் தன் சிறு பிள்ளையை வழிநடத்தும் சித்திரத்தை இந்த மொழி பரிந்துரைக்கிறது. "அவர்களின் அடிமைத்தன வீடாகிய

*எகிப்துதேசத்திலிருந்து கொண்டுவரும்படிக்கு* நான் அவர்களுடைய கையைப் பிடித்தநாள் வரை ஜனங்கள் பலவீனர்களும் **எகிப்தைவிட்டு** வெளியேற முடியாதவர்களுமாய் இருந்தனர்."[17] அந்தக் காலகட்டத்தில் அவர்களுடைய ஆவிக்குரிய முன்னேற்றத்திற்குப் பொருத்தமான ஒரு முறைமையைத் தேவன் தமது பிள்ளைகளுக்குக் கொடுத்தார். பாவத்தின் குணாதிசயம் குறித்த விழிப்புணர்வு அவர்களுக்கு முதலாவது தேவையாயிருந்தது. பழைய உடன்படிக்கை பாவத்தை வெளிப்படுத்தும், ஆனால் ஒருவனும் பிரமாணத்தினால் நீதிமானாக்கப்படுதலோ அல்லது இரட்சிக்கப்படுதலோ கூடாத காரியம் (ரோமர் 3:20; காண்க கலா. 3:19-21). பாவம் நிறைந்த மனிதனின் ஆழமான தேவைகளைச் சந்திக்கக் கூடாதவைகளாக இருந்தது, ஆகையால் பாவிகளை இரட்சிக்க முடியாததாக இருந்தது.

இஸ்ரவேலர்கள் தொடர்ந்து பிரமாணத்தை மீறுகிற காரணத்தால், இஸ்ரவேலர்கள் மீது தேவன் குற்றம் கண்டுபடித்தார்: **அவர்கள் தொடர்ந்து என் உடன்படிக்கையில் நிலைநிற்கவில்லை.** அவர் உடன்படிக்கையில் குற்றம் கண்டுபிடித்தார், காரணம் அது தொடர்ந்து ஆக்கினைக்குட்படுத்தியது. நித்தியமாகப் பயங்கரமான குற்றவுணர்வுடன் தமது ஜனங்கள் சுமந்து திரிவதை அவர் விரும்பவில்லை, குற்றவுணர்வானது பழைய பிரமாணத்தின் அவசியமான தாக்கம் ஆகும். மனுக்குலத்தின் மீது வாதைகளை அனுப்ப தேவன் ஒருபோதும் விரும்பாதபடியால், புதியதைக் கொண்டு பழைய பிரமாணத்தை அவர் மாற்றவேண்டியதாயிருந்தது. ஆகையால், பழைய பிரமாணம் என்பது அவருடைய நித்திய திட்டம் இல்லை. புதிய பிரமாணமானது பழையது போன்று இல்லை.

அவருடைய உடன்படிக்கையை அவர்கள் இயல்பாகவே நிராகரித்ததின் விளைவே **நானும் அவர்களைப் புறக்கணித்தேன்** என்று தேவன் சொன்னதற்கு காரணம் ஆகும். இஸ்ரவேலை இரட்சிப்பதில் ஆர்வக் குறைவு அல்லது கரிசனைக் குறைவு என்பதை இந்தக் கூற்று சுட்டிக்காட்டவில்லை. ஆனாலும், ஜனங்கள் முற்றிலுமாக அவரைத் தூரப்படுத்தும்போது தேவன் அவர்களை விட்டுவிடுவார் (ரோமர் 1:18, 24, 26, 28-ஐ காண்க).

### மனதிலும் இருதயத்திலும் எழுதப்பட்ட ஒரு உடன்படிக்கை (8:10-12)

**10அந்த நாட்களுக்குப்பின்பு நான் இஸ்ரவேல் குடும்பத்தாரோடே பண்ணும் உடன்படிக்கையாவது: என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே வைத்து, அவர்களுடைய இருதயங்களில் அவைகளை எழுதுவேன்; நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள். 11அப்பொழுது சிறியவன் முதற்கொண்டு பெரியவன்வரைக்கும் எல்லாரும் என்னை அறிவார்கள்;**

**ஆகையால், கர்த்தரை அறிந்துகொள் என்று ஒருவன் தன் அயலானுக்கும், ஒருவன் தன் சகோதரனுக்கும் போதிக்கவேண்டுவதில்லை. [12]ஏனெனில் நான் அவர்கள் அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து, அவர்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன் என்று கர்த்தர்சொல்லுகிறார்.**

**வசனம் 10.** மூன்றாவதாக, இந்த புதிய உடன்படிக்கை தேவனுடைய ஜனங்களின் இருதயங்களில் எழுதப்படும்: **என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே வைத்து, அவர்களுடைய இருதயங்களில் அவைகளை எழுதுவேன்.** "அவர்களுடைய மனதிலும்" மற்றும் "அவர்களுடைய இருதயங்களிலும்" தமது பிரமாணத்தை வைப்பது என்பது மிகப் பெரிய பழைய பிரமாணத்தை அவர்கள் மனனம் செய்தது போல புதிய பிரமாணத்தை மனனம் செய்யும்படி தேவன் சொல்லவில்லை (உபா. 6:6-9). தாவீதைப் போன்ற சிலர் தங்கள் இருதயங்களில் வசனங்களை சேர்த்து வைத்தனர் (சங். 119:11). வசனம் மனனம் செய்தல் என்பது கீழ்ப்படிதலுக்கு உத்திரவாதம் தராது, ஆனால் மனனம் செய்தல் பலன் தரும். இருதயத்தில் பிரமாணத்தை வைத்தல் என்பது அதன் செயலில் தாக்கம் ஏற்படுதல் போன்றதாகவும், இருதயத்தின் புதிய இயற்கை பண்புகளைக் கொண்டிருத்தலும் ஆகும். ஒருவன் தேவனுடைய பிரமாணங்களைத் தன் இருதயத்தில் கொண்டிருப்பானேயாகில் அவன் அதிலே மகிழ்ச்சியாயிருப்பான் (சங். 1:1-3), அவன் அவைகளுக்குக் கீழ்ப்படிய விரும்புவான் மற்றும் அவன் தேவனுடைய சித்தத்தை நேசிக்கிறவனாக இருப்பான். தன் இருதயத்தில் விசுவாசித்துப் புரிந்துகொள்ளாதவரையில் ஒருவனும் புதிய உடன்படிக்கைக்குள் வரமுடியாது.

பழைய உடன்படிக்கையின்படி உடன்படிக்கையைக் குறித்தும் மற்றும் தேவன் குறித்தும் அறியும்படிக்கு ஒரு பிள்ளைக்கு போதிக்கப்பட வேண்டும். சில தேவனுடைய உடன்படிக்கைகளின் ஜனங்கள் போதனைகளை ஒருபோதும் தங்கள் இருதயத்தில் ஏற்றுக்கொண்டதில்லை. குறிப்பிட்ட மனோபாவத்தின் அவசியத்தை இது சுட்டிக்காட்டுகிறது, பிலிப்பு பட்டணத்திலுள்ள கிறிஸ்தவர்களை "இந்த சிந்தையே [கிறிஸ்துவிலிருந்த சிந்தை] உங்களில் இருக்கக்கடவது" (பிலி. 2:5-11) என்று பவுல் அவர்களை வேண்டிக்கொள்கிறார், கிறிஸ்துவின் கீழ்ப்படிதலின் சிந்தையைக் கிறிஸ்தவர்களும் கொண்டிருக்க வேண்டும். புதிய பண்புகளைக் கொண்டிருக்கிறபடியினால், புதிய உடன்படிக்கையின் கீழ் இருக்கிறவர்கள் கீழ்ப்படிய விரும்பகிறவர்களாக இருக்கிறார்கள். அவ்வாறாக நாம் கீழ்ப்படியும்போது, நாம் மேன்மையிலே வளர்கிறவர்களாக இருக்கிறோம். ஒரு தேறின கிறிஸ்தவன் கீழ்ப்படிய வேண்டும் என்ற கடமைக்காக அல்ல, மாறாக அன்பினிமித்தம்

கீழ்ப்படிகிறவனாயிருக்கிறான். இது அவனுடைய குணாதிசயத்தின் அங்கமாகிவிடுகிறது, இது அவனுடைய இருதயத்தில் நடப்பட்டதாக இருக்கிறது.

புதிய இருதயம் அல்லது ஆவி என்ற கருப்பொருள் எசேக்கியேலில் உள்ளது (காண்க எசே 11:19, 20), ஒருவன் புதிய உடன்படிக்கையைக் கொண்டிருப்பானேயாகில் அவன் முற்றிலும் கீழ்ப்படியும் தன்மையை அடைந்திருப்பான் என்ற கோணத்தில் அங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. யூதர்கள் பாபிலோனிய அடிமைத்தனத்திலிருந்து திரும்பிவருவதோடு இந்தச் சிந்தனை தொடர்புடையதாக உள்ளது. இஸ்ரவேலர்கள் பிரமாணங்களை கைக்கொள்வதாக வாக்குப்பண்ணிணார்கள் ஆனால் அவர்களுடைய நல்ல எண்ணங்கள் அவர்களுடைய ஒழுக்க நெறியோடு தொடர்பற்றதாக இருந்தது (யாத். 24:7).[18] “மாம்சத்தின் மூலமாக” தடுக்கும் பலவீனம் உள்ளது (ரோமர் 8:3). தேவனுடைய பிரமாணத்தைத் தாவீது தனது இருதயத்தில் வைத்திருந்தாலும்கூட (சங். 119:11), அதற்கு அவன் பரிபூரணமாகக் கீழ்ப்படியவில்லை. ஆகையால் இதை வெளிப்படுத்துவது என்பது பிரமாணத்தை உள்வாங்கிக்கொள்வதைவிட மேலானது ஆகும்.[19] பழைய உடன்படிக்கையைக் குறித்த தேவனுடைய நோக்கத்தைத் தமது சீஷர்கள் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதால் இயேசு தமது மலைப்பிரசங்கத்தில் அதைக் குறித்து தமது விளக்கத்தை கொடுத்தார். அவர்களுடைய நீதி வேதபாரகர்கள் மற்றும் பரிசேயர்களின் பாரம்பரிய வெளிப்புறத் தோற்றத்தை விட இராஜ்ஜியத்திற்குள் நுழைவதற்காக மேலானதாக இருக்க வேண்டும் (மத். 5:20).

தேவனுடைய புதிய உடன்படிக்கைக்குக் கீழ்ப்படியும்படிக்கு ஒருவனுடைய இருதயத்தின் முழு அர்ப்பணிப்பு மூலம் வல்லமை நமக்கு வருகிறது. ஒரு குழந்தை பாலுக்காக அழுவதுபோல் தேவனுடைய வார்த்தைக்காக ஏங்கும்போது பெரிய அளவிலான வல்லமையை நாம் பெற்று, அதன் மூலம் இரட்சிப்பை அடையும்படிக்கு வளர முடியும் (1 பேதுரு 2:1, 2).

**நான் அவர்கள் தேவனாயிருப்பேன்**, என்பதன் அர்த்தம் ஒவ்வொரு நபரும் தனிப்பட்டவிதமாகத் தேவனிடம் வர முடியும். ஆசரிப்புக் கூடாரத்தில் திரைச்சீலை விளக்கப்பட்டுள்ளது போல, பழைய உடன்படிக்கையில் தேவனுக்கும் அவருடைய ஜனங்களுக்கும் இடையே பெரிய இடைவெளி இருந்தது. புதிய உடன்படிக்கைக் கீழ், நாம் அவருடைய ஜனங்கள் மற்றும் அவர் நம்முடைய தேவன் அவருடைய குடும்பம் என்பதால் நாம் தேவனிடம் நேரடியாகத் தொடர்பு கொள்ள முடியும். பழைய உடன்படிக்கையின் கீழ், பொது மக்களைவிட மேலாக ஆசாரியர்கள் மிக உயர் வகுப்பைச் சார்ந்தவர்கள் போன்ற முறைமை இருந்தது. தேவனுடைய இராஜ்ஜியத்தில் எல்லாக் குடிமக்களும் பழைய ஏற்பாட்டு

ஆசாரியர்களுக்குச் சமமானவர்கள்.

ஒரு வகையில், இஸ்ரவேலர் தேவனை அறிந்திருந்தனர், காரணம் அவர் தம்மை அவர்களுக்கு வெளிப்படுத்தியிருந்தார். “நான் அவர்கள் தேவனாயிருப்பேன், **அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள்.**” என்று தேவன் அறிவித்திருந்தார். அவருடைய கட்டளைகளை நிராகரிப்பதும், கைக்கொள்ளத் தவறுவதும், அவரை அறியாமலிருப்பதற்குச் சமம் (நியா. 2:10-ஐ காண்க). தேவனை அறிந்திருக்க வேண்டுமென்றால், “தங்கள் ஆலோசனைக்காரராகவும், தங்கள் காவலராகவும், தங்கள் மீட்பராகவும், தங்கள் வழிகாட்டியாகவும் ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும்.”[20] ஒழுக்கமற்று வாழ்கிற மக்களைத் தேவனை அறியாதவர்களுக்குச் சமம் என்று ஓசியா கூறுகிறார் (ஓசியா 4:1-3). அதே விதிமுறை புதிய ஏற்பாட்டிற்குப் பொருந்தும். ஒரு பாவம் நிறைந்த வாழ்க்கையானது, போதுமான அளவு கிறிஸ்துவை அறிந்திருக்க வில்லை என்பதை வெளிப்படுத்துகிறது:

> *நீங்களோ இவ்விதமாய்க் கிறிஸ்துவைக் கற்றுக்கொள்ளவில்லை.* இயேசுவினிடத்திலுள்ள சத்தியத்தின்படியே, நீங்கள் அவரிடத்தில் கேட்டறிந்து, அவரால் போதிக்கப்பட்டீர்களே. அந்தப்படி, முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள் (எபே. 4:20-24; முக்கியத்துவப்படுத்தப்பட்டுள்ளது).

எபேசியர்கள் தங்கள் இருதயத்தை மாற்றிக்கொள்வது என்பது அவர்களுடைய கடமையாயிருந்தது! கிறிஸ்துவைக் குறித்து அவர்கள் கற்றுக்கொண்டவற்றைச் சரியாகப் புரிந்துகொண்டு பிரயோகப்படுத்தியிருப்பார்களேயானால், உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாக இருப்பார்கள் (எபே. 4:23). உண்மையில், இந்த ஆவியை ஏற்கனவே கொண்டிருப்பார்களேயானால், திரும்பவும் புதுப்பிக்கப்பட வேண்டியதாயிருக்கும். எபேசியர் 5:18 “துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிகொள்ளாமல், ஆவியினால் நிறைந்து.” என்ற கட்டளைக்குக் கீழ்ப்படிவதன் மூலம் இது சாத்தியமாகும். ஒருவன் தன் இருதயத்தில் தேவனை நேசிக்கிறவனாக இருப்பானேயானால், பாவம் செய்வதனால் தன்னைக் காயப்படுத்திக்கொள்ள விரும்பமாட்டான்.

**வசனம் 11. … எல்லாரும் என்னை அறிவார்கள்; ஆகையால், கர்த்தரை அறிந்துகொள் என்று ஒருவன் தன் அயலானுக்கும், ஒருவன் தன் சகோதரனுக்கும் போதிக்கவேண்டுவதில்லை.** ஒருவன் புதிய உடன்படிக்கைக்குள் வர விரும்பினால் அவன் உண்மையில்

மனந்திரும்பியிருக்க வேண்டும், அதேவேளையில் ஒரு குழந்தை மாம்சத்தில் பிறக்கையில் அது பழைய உடன்படிக்கையின் கீழ் பிறக்கிறது. இவ்வாறாக, பழைய உடன்படிக்கையானது தனிநபர் அர்ப்பணிப்பைவிட, பெரும்பாலும் குடும்பம் அல்லது தேசியம் சார்ந்ததாக உள்ளது. பழைய உடன்படிக்கையானது இஸ்ரவேல் ஜனங்களுக்கு முதன்மையாக உள்ளது, புதிய உடன்படிக்கையானது யூதர்கள் அல்லது புறஜாதிகள் கொண்ட எல்லாத் தேசத்து ஜனங்களுக்கும் உடையதாக இருக்கிறது. குழந்தைகள் பெற்றோரின் விசுவாசத்தின் மூலம் பரலோக இராஜ்ஜியத்திற்குள் நுழைந்துவிடுவார்கள் என்று சிலர் தவறான கருத்தைக் கொண்டுள்ளனர். பெற்றோர் ஒருவேளை குழந்தைக்கு ஞானஸ்நானம் (தெளிப்பு) கொடுத்திருப்பார்கள், இதனால் தான் மனந்திரும்ப வேண்டும் அல்லது கீழ்ப்படிய வேண்டுமென்ற அவசியத்தை அந்தக் குழந்தை ஒருபோதும் காண்பதில்லை. ஒரு நபர் பழைய உடன்படிக்கையின் கீழ் பிறந்திருக்கிறவனுக்குத் தேவனை அறியும்படிக்கு போதிக்க வேண்டும் (வசனம் 11). புதிய உடன்படிக்கையின் கீழ் இது எதிர்மறையாக இருக்கிறது ஒருவன் விசுவாசக் கேள்வியினாலே தேவனை அறிந்து கொள்கிறான் (கலா. 3:2). ஆவியினாலும் மற்றும் தண்ணீரினாலும் பிறப்பதையும் சேர்த்து, தனிப்பட்ட விசுவாசமும் கீழ்ப்படிதலும் புதிய பிறப்பின் கீழ் அவசியமாகிறது (யோவான் 3:5; 1 பேதுரு 1:23; காண்க 1 கொரி. 4:15). எபிரெயர் 8:8-12 பகுதியானது அதன் நடையிலும் மற்றும் செயலிலும் குழந்தை ஞானஸ்நானத்தை நிராகரிக்கிறது, காரணம் இந்தச் செயலானது புதிய உடன்படிக்கையைப் பழைய உடன்படிக்கைபோல் மாற்றுகிறது, ஒருவன் உடன்படிக்கையின் கீழ் பிறந்துவிட்டால், பின்பு அவன் “தேவனை அறியும்படிக்கு” போதிக்கப்பட வேண்டும். கிறிஸ்தவ யுகத்தில், ஒருவன் புதிய உடன்படிக்கைக்குள் நுழைவதற்கு, சுவிசேஷத்தை புரிந்திருப்பதும் மற்றும் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவதன் மூலமும் தேவனை அறிந்திருக்க வேண்டும். மனந்திரும்பதல், கிறிஸ்துவை அறிக்கை செய்தல், மற்றும் ஞானஸ்நானத்தில் அவருடன் அடக்கம்பண்ணப்படுதல் மூலம் போதனை அமைப்பில் சரியாகவும் இருதயப் பூர்வமாகவும் கீழ்ப்படிந்து மற்றும் தேவனுடைய கட்டளைகளைக் கற்றுக்கொள்வது மூலம் இயேசுவில் விசுவாசம் வைக்கலாம் (ரோமர் 6:17, 18).

**அப்பொழுது சிறியவன் முதற்கொண்டு பெரியவன்வரைக்கும் எல்லாரும் என்னை அறிவார்கள்.** இராஜ்ஜியத்திலுள்ள சக குடிமகனுக்கு “தேவனை அறிதல்” குறித்துப் போதிக்க வேண்டிய அவசியமில்லை. தேவன் சொன்னார், எல்லாரும் என்னை அறிவார்கள் - இல்லையென்றால், கிறிஸ்துவின் இராஜ்ஜியத்தில் அவர்கள் இருக்கப்போவதில்லை. தேவனுடைய சித்தமானது இன்னமும்

நம்முடைய மனதிலும் இருதயத்திலும் போதனையின் மூலம் வைக்கப்பட்டுள்ளது. இயேசு சொன்னார், தம் மூலம் தேவனிடம் வருகிற அனைவரும் முதலாவது போதிக்கப்பட வேண்டியவர்களாயிருக்கிறார்கள் (யோவான் 6:44, 45). விசுவாசமானது கேள்வியினாலே … தேவனுடைய வசனத்தினாலே வரும் (ரோமர் 10:17).

**வசனம் 12.** பெரிய ஆசீர்வாதம் நமக்குச் சாத்தியமானது ஆகும்: **நான் அவர்கள் அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து, அவர்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன்.** உண்மையான மன்னிப்பானது முதல் உடன்படிக்கையின் குறைபாடு ஆகும் (எபி. 9:9; 10:1, 2, 11). அது சம்பிரதாய விளைவுகளைக் கையாளுகிறது, "அது எப்படி இருதயம் அல்லது வாழ்க்கையின் சுத்திகரிப்பை செய்யும்?"[21] "பழைய ஏற்பாட்டுப் பலிகள் பாவத்தை *மன்னிப்பதில்லை*, பாவத்தை *நினைவுப்படுத்துகிறதாயிருக்கிறது* (எபி. 10:1-3, 18)."[22] ஒரு மனிதன் சடங்காச்சாரப் பூர்வமாகச் சரியாக இருக்கலாம், ஆனால் இருதயத்தில் அல்ல, இருப்பினும் மற்றவர்களுடைய கணிப்பில் நீதிமானாகக் கருதப்படலாம் (லூக். 18:9-14). பிரமாணத்தின் சடங்குகள் ஆவிக்குரிய சத்தியங்களின் சரியான புரிதலுக்கு ஒருபோதும் நடத்திச் செல்லாது, காரணம் அவைகள் பாவத்தைத் தேவனால் சகித்துக்கொள்ள முடியாது என்பதைக் காண்பிக்கும் நோக்கம் கொண்ட வழிமுறைகள் ஆகும். அநேக யூதர்களுக்குச் சடங்குகள் சம்பிரதாயமாகிறது. இப்போது பாவங்களின் வருடாந்திர நினைவுகூருதலுக்குப் பதில் (எபி. 10:1, 2), பாவங்களின் வாராந்திர நினைவுகூருதலும், மற்றும் தொடர்ந்து கர்த்தருடைய பந்தியில் கலந்துகொள்ளுகையில் நிரந்தரமாக எடுத்துப்போடப்படும் (மத். 26:28). கிறிஸ்துவுக்குள், ஒருபோதும் பாவம் செய்யாதவர்கள்போல் தேவன் நம்மை நடத்துகிறார். நமக்கான பாவமன்னிப்பின் அடிப்படையானது, உண்மையில் பழைய உடன்படிக்கையின் கீழ் நம்முடைய மனந்திரும்புதலில் அல்ல, ஆனால் கிறிஸ்துவின் பலியினால் மட்டுமே (ரோமர் 8:33, 34). ஆயினும் மனந்திரும்புதல் இன்னமும் அவசியமாயிருக்கிறது (லூக். 13:3, 5). கிறிஸ்துவுக்குள், பாவமானது மனப்பூர்வமாகக் குற்றவுணர்வுடன் உணர்த்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டு மறக்கப்பட்டுவிட்டது (1 யோவான் 1:7-10).

நம்முடைய பாவங்களைத் தேவனால் மறக்க முடியுமா? நிச்சயமாக, நம்முடைய குற்றவுணர்வு எண்ணங்களை முற்றிலும் துடைத்துச் சுத்தம் செய்து மற்றும் அந்தப் பாவங்களை அவர் ஒருபோதும் நமக்கு எதிராகக் கொண்டுவரமாட்டார். "நான் உன்னை மன்னிக்கிறேன், ஆனால் நீ செய்ததை ஒருபோதும் மறக்கமாட்டேன்" என்று சொல்லுகிற ஒருவர், தேவன் மன்னித்ததுபோல உங்களை மன்னிக்கவில்லை.

**ஒருபோதும் நாள்பட்டதாகாத ஒரு உடன்படிக்கை (8:13)**

**[13]புது உடன்படிக்கை என்று அவர் சொல்லுகிறதினாலே முந்தினதைப் பழமையாக்கினார்; பழமையானதும் நாள்பட்டதுமாயிருக்கிறது உருவழிந்துபோகக் காலம் சமீபித்திருக்கிறது.**

**வசனம் 13.** நான்காவதாக, இந்தப் புதிய உடன்படிக்கையானது ஒருபோதும் நாள்பட்டதாக ஆகாது. **"புதிய உடன்படிக்கையைத்"** தேவன் அமைக்கும்போது, **முந்தினதைப் பழமையாக்கினார்; பழமையானதும் நாள்பட்டதுமாயிருக்கிறது உருவழிந்துபோகக் காலம் சமீபித்திருக்கிறது.**

"புதிய உடன்படிக்கை" என்ற வார்த்தைகள் முதலில் வந்தது பழையது மற்றும் காலாவதியானது என்பதை வெளிப்படுத்துகிறது. 2 கொரிந்தியர் 3:6, 14-ல் முன்னாள் உடன்படிக்கையைச் சுட்டிக்காட்டும் விதமாகப் பவுல் "பழையது" என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறார். முதல் உடன்படிக்கையை நாள்பட்டதாக்குவது என்பதன் அர்த்தம் "இனிமேல் அது அவசியமற்றதாகிறது," அது மறைந்து போகும்போது, அது எல்லாருக்கும் ஆதாரமாயிருக்கும். மறைந்து போவது நிகழுகையில், பழைய உடன்படிக்கையானது பழங்காலத்தின் காலாவதியானது. NEB சொல்கிறது, "... வயதாகிற எதுவும் குறுகிய காலத்தில் அது காணாமல்போகும்." "காணாமல்போதல்" என்பதற்கான கிரேக்க வார்த்தை (ἀφανισμός, *அஃபனிஸ்மோஸ்*) மறைந்துபோதல் என்ற அதே வார்த்தையிலிருந்து இந்த வார்த்தை வந்தது. இது யாக்கோபு 4:14-ல் தோன்றாமற்போகிற புகையைப்போலிருக்கிறது என்று பயன்படுத்தப்பட்டுள்ளது.

பழைய உடன்படிக்கையானது சிலுவையிலே அறையப்பட்டுவிட்டது. இயேசு இதை மத்தேயு 5:17, 18-ல் குறிப்பிடுகிறார். அவர் சிலுவையிலே அறிவித்தார் "முடிந்தது!" என்று அறிவித்தார் என்பது (யோவான் 19:30) நிச்சயமாக "என் வாழ்வு முடிந்தது" என்பதை விட மேலான அர்த்தத்தை குறிக்கிறது. யோவான் 17:4-ல் அவர் ஏற்கனவே ஒப்படைத்திருந்த வேலையை இயேசு செய்து முடித்துவிட்டார் என்று இயேசு தமது பிதாவிடம் சொல்லியிருந்தார். ஆன்மீக அமைப்பு தேவனால் கொடுக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருப்பதால், கிறிஸ்துவின் மரணத்துடன் யூத மதம் முடிந்துவிட்டது.

ஆயினும், ஆலயம் மையம் கொண்டதாகவும் மற்றும் நீளமான சாரமந்தை கொண்டதாகவும், யூத மதம் இருப்பதினால் மேலும் நாற்பது வருடங்கள் நிலைத்திருந்தது. ரோமானிய இராணுவம் ஒரு கல்லின் மேல் ஒரு கல் இல்லாமல் போகப்பண்ணினபோது, மனிதனின் நிலைபாட்டிலிருந்து இது இறுதியாக கி.பி. 70-ல் மறைந்துபோனது

(மத். 24:2). ஆலயத்தின் அழிவை இயேசு ஏற்கனவே முன்னறிவித்திருந்தார் (மாற்கு 13:2), மற்றும் அதன் முடிவை ஸ்தேவான் அறிவித்திருந்தான் (அப். 6:14-ஐ காண்க). ஆலயம் திரும்பக் கட்டப்படும் என்றோ லேவிய முறைமை பலியிடுதல் திரும்பக் கொண்டுவரப்படும் என்றோ எந்தக் குறிப்பும் புதிய ஏற்பாட்டில் இல்லை. இவைகள் பூமியிலிருந்து நித்தியமாகப் போய்விட்டன. யூத மதத்தின் கண் முன் இருந்த அடையாளமும் அல்லது நிழலும், இன்று மீதமிருப்பது பழைய உடன்படிக்கையின் கூடு மட்டுமே. ஆலயத்தைத் திரும்பக் கட்டுதல் என்பது கிறிஸ்துவின் மூலம் நாம் மீட்கப்பட்ட புதிய உடன்படிக்கையைத் தூக்கி எரிய முயற்சிப்பதற்குச் சமம். மேன்மையானதிலிருந்து கீழானதற்குப் பின்னோக்கி பயணம் செய்வது போன்றதாகும்.

## பயன்பாடு

**முன்மாதிரியான பிரதான ஆசாரியன் (8:1)**

“எங்களுடைய ஆசாரியர் பணியில் இருப்பதை எங்களால் காண முடிகிறது, ஆனால் உங்கள் ஆசாரியரைப் பார்த்தோம் என்று சொல்வதற்கு ஒருவருமில்லை என்று சில யூதர்கள் கேட்கலாம். உங்களுக்கு ஆசாரியர் இருக்கிறார் என்பது உங்களுக்கு எப்படி தெரியும்?” கிறிஸ்துவின் பிரதான ஆசாரியத்துவம் என்பது கிறிஸ்தவர்களுக்கான விசுவாசம் ஆகும். இது வெளிப்படுத்தப்பட்ட எழுத்தாளர் மூலம் வெளியாகியிருப்பதனால், நாம் விசுவாசிக்கலாம். தேவனைப் பார்க்க முடியாத ஒருவர் எப்படி அவரில் நம்ப முடியும்? என்ற இறைமறுப்பாளரின் கேள்விக்கு ஒரு நண்பரின் பதில் அருமையாயிருந்தது. அவருடைய பதில், உங்கள் மூளையைப் பார்த்திருக்கிறீர்களா? இல்லையா? அப்படியென்றால் உங்களுக்கு மூளை இருக்கிறது என்பதை நீங்கள் எப்படி அறிவீர்கள்? இறை மறுப்பாளன் தனக்கு மூளை இருக்கிறது என்று எப்படி நம்புகிறானோ, அதேபோன்று நம்முடைய விசுவாசத்திற்கும் மற்றும் நம்முடைய பிரதான ஆசாரியரிலுள்ள நம்பிக்கைக்கும் ஆதாரம் உண்டு. அதிகாரம் 7 விவரிப்பது என்னவென்றால், நமக்குப் புதிய உடன்படிக்கை இருப்பதால், நம்முடைய ஆசாரியர் மனிதர்கள் காணும்படிக்குப் பூமியில் தமது பணியைச் செய்யவில்லை. அவர் வேறு கோத்திரத்தைச் சார்ந்தவர், அதாவது யூதா கோத்திரமல்ல, ஆகையால், அவர் இங்கே பிரதான ஆசாரியராகப் பணியாற்ற முடியாது. நம்முடைய பார்வைக்கு அப்பாற்பட்டு தமது பணியை ஆற்றுகிறார். ஒரு நாளிலே நாம் அவரைக் காண்போம். பரலோகத்திலுள்ள நிஜ ஆசரிப்புக் கூடாரத்தில் அவர் பணி செய்கிறவராயிருக்கிறாரே தவிர சரீரப்பிரகாரமாக இந்த பூமியில் இல்லை.

### இந்த இயேசு யார்? (8:1)

எபிரெய நிருபத்தில் இயேசுவை நம்முடைய கர்த்தரும், ஆசாரியரும் மற்றும் இராஜாவுமாய் உயர்த்தப்பட்டவராக நாம் காண்கிறோம். சில மக்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள விரும்புகிறார்கள், இருப்பினும், அவரைக் குறுகிய வடிவில் ஏற்றுக்கொள்ள விரும்புகிறார்கள். எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாத, நேசிக்கிற மேசியாவை அவர்கள் விரும்புகிறார்கள். சிலுவை சுமப்பதையோ அல்லது முழுப் பலியாகிய அவருடைய வாழ்க்கையைத் தமக்குப் பலியிடுவதையோ அவர் உங்களிடம் எதிர்பார்க்கக்கூடாது. அவர்களுக்கு இரட்சகர் வேண்டும், நீதிநெறியின் விசேஷ பிரமாணத்தை முன்வைக்கிறவராக அவர் இருக்கக்கூடாது. அநேகருக்கு, கிறிஸ்து சிறந்த தலைவராக திகழ்கிறார், ஆனால் பாவம் மற்றும் பணம் மாற்றுபவர்களை நியாயந்தீர்ப்பவராக அல்ல. இன்றைய காலத்தில் அதிகமான போதனைகளால், "கிறிஸ்து பிரசங்கிக்கப்பட்டதுபோல் தெரியலாம், ஆனால் அவர் அல்ல."[23] எவ்வாறு வாழ வேண்டும் என்பதற்கு கிறிஸ்துவின் அதிகாரம் மற்றும் அறிவுரைகளை நாம் ஏற்றுக்கொள்ளாவிட்டால், நாம் அவரிடம் இன்னும் திரும்பவில்லை.

### அவர் பரலோகத்தில் வீற்றிருக்கிறார் (8:1)

தேவனுடைய வலதுபாரிசத்தில் இயேசு வீற்றிருக்கிறார் (ஆளுகை செய்கிறார்). தாவீதின் சிங்காசனத்தில் அமர்ந்திருக்கும்படிக்கு அவர் எழுப்பப்பட்டார் என்று பேதுரு சொல்லுகிறார் (அப். 2:30-33). இராஜாவாகவும் மற்றும் ஆசாரியராகவும் ஆளுகை செய்கிற கிளை என்பவரைக் குறித்துச் சகரியா சொன்ன தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலே இது (சக. 6:12, 13). கிறிஸ்து தற்போதைய "சபை யுகத்தின்" காலத்தில் ஆட்சி புரியவில்லை என்று பிரிமில்லினியல் பள்ளி சிந்தனை கூறுகிறது. மாறாக, பேதுருவிலும் மற்றும் எபிரெயரிலும் அவர் இப்போதும் ஆளுகை செய்கிறார் என்பதை இருவரும் குறிப்பிடுகின்றனர். புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவின் இராஜ்ஜியத்திலிருந்து "சபையின் காலம்" தெளிவுபடுத்தப்படவில்லை. சபையானது நிகழ்காலத் தேவனுடைய இராஜ்ஜியம் என்பதைச் சிலர் சிந்திப்பதேயில்லை, என்றாலும் இரட்சிக்கப்படுகிற அனைவரும் சபையிலே சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள் (அப். 2:47), அதன்படி அவர்கள் பாவத்திலிருந்து மீட்கப்பட்டு இராஜ்ஜியத்திலிருக்கிறார்கள் (கொலோ. 1:13, 14), நடைமுறையிலே வேறுபாடுகள் கிடையாது.

### ஜீவபலிகள் (8:3)

நாம் நம்முடைய சரீரங்களை "… ஜீவபலியாக …" உருவாக்க

வேண்டும் (ரோமர் 12:1, 2), ஆனால் அதன் அர்த்தம் "வாழ்நாள் முழுவதும் ஆராதனை" செய்ய வேண்டும் என்று அல்ல. தேவனை ஆராதித்தல் என்பது அவர் நியமித்த ஒழுங்கின்படி செய்யப்பட வேண்டும். ஒரு குழந்தை தனது தகப்பனை பிரியப்படுத்தும்படிக்கு அவரைக் கனப்படுத்தும் விதமாகச் செயல்படுவதில்லை. மாறாக, தனது தகப்பன் கற்றுக்கொடுத்தபடி வாழ்ந்து பிரியப்படுத்துகிறது. பரலோக தேவனை நாம் ஆராதிப்பது அவ்வாறாக இருக்க வேண்டும். எல்லாவிதமான ஆராதனையையும் தேவன் ஏற்றுக்கொள்வதில்லை. ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆபேலின் ஆராதனை மற்றும் ஏற்றுக்கொள்ளப்படாத காயீனின் காணிக்கை என்பதையும் அவர் மிகத் து ல்லியமாகத் தெளிவுப்படுத்துகிறார் (ஆதி. 4:1-5; எபி. 11:4). ஆபேல் "விசுவாசத்தில்" செலுத்தினான், தேவன் எதை அங்கிகரித்திருந்தார் என்பதை அவன் கவனமாக செய்தான் என்பது தான் அதன் அர்த்தம் (ரோமர் 10:17). தேவனைக் கனப்படுத்தும்விதமாக ஒரு சிலை செய்வது போன்று, ஆபேல் வேறு எதையாவது செய்யத் தெரிந்தெடுத்திருக்கலாம், ஆனால் தேவன் பலியை அங்கிகரித்திருந்தபோது, அவர் அதை கொண்டிருந்திருக்கமாட்டார்.

நம்மில் காணப்படுகிற "தாலந்துகளை" வைத்துக்கொண்டு நாம் விரும்புகிறவிதமாகத் தேவனைப் பிரியப்படுத்த முடியுமா? உதாரணமாக ஒரு திறமை வாய்ந்த காய்கறி விவசாயம் பண்ணுகிறவர் செடிகளை வளர்க்கும் விதத்தினால் தேவனை ஆராதிக்க விரும்பினால் - அதை ஆராதனைக் கூடுகையில் செயல்படுத்த முடியுமா? தேவன் அங்கீகரித்த முறைமை இருக்கும்போது, எழுதப்பட்டிருப்பதைத் தாண்டி நாம் செல்லக் கூடாது (1 கொரி. 4:6). கிறிஸ்துவுக்குள் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிற சுதந்திரம் (கலா. 5:1) இந்த அளவுக்குப் போகும்படிக்கு நமக்கு கொடுக்கப்படவில்லை. புதிய உடன்படிக்கை பிரமாணத்திலிருந்து நம்மை விடுவித்துள்ளது, ஆனால் தேவனுடைய விசேஷ சித்தத்திற்குக் கீழ்ப்படியாமையின் மூலம் பாவம் செய்யும் அளவிற்கு அது நமக்குச் சுதந்திரம் கொடுக்கவில்லை.

கிறிஸ்து தொடர்ச்சியான பலியை செலுத்துகிறார் என்றும் இந்தப் பகுதியில் எதுவும் சுட்டிக்காட்டப்படவில்லை. கிறிஸ்து தொடர்ந்து நம்முடைய பரிந்துபேசுகிற ஆசாரியராகப் பணியாற்றுகிறார், பலி செலுத்தும் ஆசாரியராக அல்ல. அவருடைய பலி செலுத்தும் பணியானது திரும்பத் திரும்பச் செய்வது அன்று (எபி. 9:28). கிறிஸ்து செலுத்துவதற்கு என்று சில உண்டு (வசனம் 3), ஆனால் தினந்தோறும் பலி செலுத்துவது அவருக்கு அநாவசியமானது.

**மாதிரியின்படி (8:5)**

வேதாகமம் சிலவேளைகளில் மாதிரிகளைச் சுட்டிக்காட்டுகிறது. ஒரு போதனையின் *அமைப்பானது* பாவத்திலிருந்து

விடுதலையாக்கப்பட்டிருக்கும்படிக்குக் கிறிஸ்தவர்களைக் கீழ்ப்படிதலுக்கு வழிநடத்துகிறது. ரோமர் 6:17, 18-ன் சாராம்சமானது ரோமானிய கிறிஸ்தவர்கள் “அந்த விதமான போதனைகளுக்கு கீழ்ப்படிந்தபோது” அவர்கள் பாவத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டார்கள். சில முறைமைகளுக்கு *வடிவம்* கொடுக்கப்படுவது அவசியமாகிறது. சுவிசேஷம் என்பது நற்செய்தி மற்றும் மகிமையான செய்தி, ஆனால் சுவிசேஷத்தில் கீழ்ப்படிவதற்கு என்ன முறை உள்ளது? ரோமர் 6:3, 4-ல் கிறிஸ்துவுக்குள்ளும் மற்றும் அவருடைய மரணத்திலும் இந்தச் சதோதரர்கள் நுழையும் நேரத்தை சுட்டிக்காட்டுவது மூலம் பவுல் ஏற்கனவே விளக்கம் கொடுத்துள்ளார். இது ஞானஸ்நானம் எடுக்கும் சமயத்தில் நிகழ்கிறது. மரித்தல், அடக்கம்பண்ணப்படுதல், மற்றும் உயிர்த்தெழுதலின் *முறையானது* கிறிஸ்துவுக்குள் மூழ்குதலின் செயலில் நிறைவேறுகிறது. முறைகளுக்கு கீழ்ப்படிதல் என்பது முக்கியமானது, ஏனென்றால் அவ்வாறாகத்தான் ஒருவன் கீழ்ப்படிதலினால் கிறிஸ்துவுக்குள்ளான இரட்சிப்பின் மண்டலத்திற்குள் நுழைய முடியும், அதன் மூலம் அவருடைய மரணத்தின் பிரதிபலனில் பங்கடையலாம் (ரோமர் 6:4). பின்பு அவர் புதிய வாழ்க்கை வாழ எழுப்பப்படுகிறார்கள் (ரோமர் 6:5), அது அவருடைய புதிய பிறப்பிலிருந்து சாத்தியமாகிறது. பரிசுத்த ஆவியானவரின் போதனைகளுக்கு ஒருவன் முழுமையாகக் கீழ்ப்படியும்போது இவைகள் அனைத்தும் நிகழ்கின்றன. இது பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்திற்கு பொருந்தாது ஏனென்றால் அதன் மையக்கருத்து ஞானஸ்நானத்திலிருந்து எழுந்திருத்தல் என்று சொல்லப்படுகிறது (ரோமர் 6:4, 5), அது தண்ணீர் கல்லறையிலிருந்து எழுந்திருப்பதற்கு மட்டுமே பொருத்தமானதாக இருக்கும். ஒருவன் ஆவியின் ஞானஸ்நானத்திலிருந்து எழுந்திருக்கவில்லை என்பது அப்போஸ்தலர்கள் அவரால் எவ்வாறு பலப்படுத்தப்படுவார்கள் என்பதை உருவகமாகச் சொல்கிறது.

“மாதிரி” என்று கூறும்போது எல்லா விவரங்களையும் சொல்ல வேண்டிய அவசியமில்லை. உதாரணமாக: அப்போஸ்தலர்கள் ஞானஸ்நானம் கொடுககும்போது மக்களின் முகத்தைக் கீழாகவும் அல்லது தலை பின்னாகவும் இருந்ததா? ஞானஸ்நானத்தின்போது தண்ணீரில் உருண்டு போகவேண்டுமா? இம்மாதிரியான விளக்கங்கள் குறிப்பிட்டுக் கூறவில்லை - ஆனால் மூழ்குதல் என்பது உள்ளது, அதைத்தான் *பாப்டிஸ்மா* என்ற வார்த்தை குறிப்பிடுகிறது. நேர்த்தியான கீழ்ப்படிதலின் கோட்பாடுகள் மோசே, நோவா மற்றும் மற்றவர்களால்ப் பின்பற்றப்பட்டது, அது நமக்கும் பொருந்தும்.

புதிய ஏற்பாட்டின் சில முறைமை அதிகாரம் ஏன் உள்ளன? சிலர் சொல்கிறார்கள் “கடினமான முறைமை என்று எதுவும் இல்லை.” முறைமை இருக்குமானால் அது கடினமாக இருக்க

வேண்டாமா?ஞானஸ்நானம் என்பது மூழ்குதலா? பாவங்களின் மன்னிப்புக்கானது ஞானஸ்நானமா? படிக்கவும் அப்போஸ்தலர் 2:38 மற்றும் 22:16. இந்த கருத்தை விட்டுக்கொடுக்க முடியாது என்று கர்த்தருடைய சபையின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் ஒத்துக்கொள்கின்றனர்.

முறைமை இல்லாமல், புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவம் திரும்பக் கொண்டுவருவதற்கான விண்ணப்பத்தில் அடிப்படை அதிகாரமே இல்லாமல் போய்விடும். தரமான பரிசுத்த போதனை இல்லாமல் இருந்தால், நெறி சார்ந்த பரிசுத்தமும் மற்றும் உறுதியான தரங்களும் இருக்காது.

**சிறந்த உடன்படிக்கை (8:6)**

தமது இரத்தம் புதிய ஏற்பாடு அல்லது உடன்படிக்கையைக் கொண்டுவருகிறது என்று இயேசு சொல்லும்போது (மத். 26:28), யாத்திராகமம் 24:8-ல் மோசேயின் வாக்கியத்திலிருந்து இதை எடுத்துப் பயன்படுத்துகிறார் என்பதில் எந்தச் சந்தேகமுமில்லை: அப்பொழுது மோசே இரத்தத்தை எடுத்து, ஜனங்களின்மேல் தெளித்து, “இந்த வார்த்தைகள் யாவையுங்குறித்துக் கர்த்தர் உங்களோடே பண்ணின உடன்படிக்கையின் இரத்தம் இதுவே என்றான்.”

அதேவேளையில், துல்லியமாகவும் மற்றும் துணிகரமாகவும் மாறுபட்டக் கருத்தை இயேசு சொன்னார், “பாவங்களின் மன்னிப்பிற்காக” என்ற வார்த்தைகளை அவர் சேர்த்தார். மோசே ஒரு விலங்கின் இரத்தத்தைப் பயன்படுத்தினார், மறுநாள் சிந்தப்பட இருக்கிற தமது சொந்த இரத்தத்திற்கு அடையாளமாக இயேசு கடைசித் இராவிருந்தில் திராட்சை ரசத்தைப் பயன்படுத்தினார் (மத். 26:29). மோசே பிரமாணத்தின் உடன்படிக்கையைக் குறித்துப் பேசினார், இயேசு கிருபை, இரக்கம், மற்றும் அன்பின் உடன்படிக்கையைக் குறித்துப் பேசினார். மோசே பாவமன்னிப்பின் ஒரு பகுதியை மட்டுமே பேசினார், ஆகையால் தேவன் தமது ஜனங்களுடன் இருப்பார், இயேசு முழுமையான மற்றும் உண்மையான பாவமன்னிப்பைக் குறித்துப் பேசினார், ஆகையால் தேவன் தமது ஜனங்களுக்குள் வித்தியாசமான விதத்தில் வாழுகிறார்.[24]

புதிய உடன்படிக்கையின் சிறப்பு என்ன?[25] இது ஒரு இணங்கப்பண்ணுதல். தேவனுடைய எல்லா ஜனங்களும் ஒரே சரீரத்தில் ஒன்று சேரப்பண்ணுகிறது (எபே. 2:14-18). உட்புறமாக, நம்முடைய சொந்த இருதயங்களுக்குள்ளாக நம்மை நாமே உற்சாகப்படுத்திக்கொள்ள அனுமதிக்கிறது, ஒருவர் இராஜ்ஜியத்தில் இருக்கவும் மற்றும் புதிய உடன்படிக்கையின் பலனை அறுவடை செய்யும்படிக்கு தேவனுடைய வார்த்தை அங்குதான் வாசம்பண்ண வேண்டும். இது அகில உலகத்திற்கானது, அனைத்து

மனுக்குலத்தையும் கிறிஸ்துவுக்குள் தேவனுடைய இரக்கத்தின் குடையின் கீழ் கொண்டுவரும்படி வடிவமைக்கப்பட்டுள்ளது (மத். 28:18-20). இது தாராளமயமானது, இதில் அனைவருக்கும் மன்னிப்பு வழங்கப்படுகிறது (எபி. 2:9). இறுதியாக, இது நிலையானது, இது நித்தியத்திற்கும் இருக்கும் என்று நமக்கு வாக்கு அளிக்கப்பட்டுள்ளது. இது ஒருக்காலமும் நாள்பட்டதாகவோ அல்லது காலாவதியாவதோ இல்லை.

**புதிய உடன்படிக்கை (8:7)**

புதிய உடன்படிக்கையைப் குறித்த அநேக முக்கியச் சத்தியங்களைக் கவனிக்க வேண்டியுள்ளது:[26]

1. *இது ஒரு நிச்சயத்தின் உடன்படிக்கை.* தேவன் நம்முடைய தேவன் மற்றும் நாம் அவருடைய ஜனம் என்று நமக்கு உறுதியளிக்கிறது (வசனம் 10). தேவனுடன் நாம் இந்த உடன்படிக்கை உறவில் இருக்கும் போது அவர் நம்முடைய பாவங்களை நினையாதிருக்கிறார் என்று உறுதியளிக்கிறது (வசனம் 12). இது உறுதியானது காரணம் 8:10-12-ல் “நான் செய்வேன்” என்று ஆறு முறை தேவன் கூறியிருக்கிறார். நம்பிக்கையோடு அவரை நாம் சார்ந்திருக்க முடியும் ஏனென்றால் அவர் சொல்கிறதை செய்கிறவர்.

2. *இது ஒரு கீழ்ப்படிதலின் உடன்படிக்கை.* தேவன் தமது பகுதியைச் செய்வார், நமக்கு முன் வைக்கப்பட்டுள்ள விதிமுறைகளை நிறைவேற்றுவது மூலம் நாம் நம்முடைய பாகத்தைச் செய்கிறோம். உடன்படிக்கை என்ற வார்த்தையின் (διαθήκη, *டயாதிகே*) அர்த்தம் மேன்மையானவர் நாம் பெற்றுக்கொள்ளக் கூடிய சலுகையை மற்றும் நிறைவேற்றக் கூடிய நிபந்தனைகளைத் தருகிறார் என்பது ஆகும். தமது இஸ்ரவேல் ஜனங்களை தம்முடைய விசேஷமானவர்களாக்க தேவன் வாக்குப்பண்ணினார் (யாத். 19:5, 6). அதை அவர் கிறிஸ்தவர்களுக்கும் செய்தார் (தீத்து 2:14; 1 பேதுரு 2:5, 9). அவருடைய பிரமாணங்கள் நம்முடைய இருதயங்களில் எழுதப்பட்டுள்ளன, ஆனால் அதன் அர்த்தம் என்ன? நாம் மனப்பூர்வமாகத் தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டும். தேவனுடைய பிரமாணம் நம்முடைய இருதயங்களில் இருக்குமானால், நம்மால் இதைச் செய்ய முடியும் (உபா. 30:11-14; எசே. 11:19, 20; சங். 40:6-8 முதல் பாகம்). யூதர்கள் தங்கள் சொந்த பாரம்பரியத்தை வளர்ப்பதில் மும்முரமாக இருந்ததினிமித்தம், பிரமாணத்தைத் தூரமாக வைத்தார்கள். உண்மையில், ஜனங்கள் பிரமாணத்தை மீறுவதிலிருந்து தடுக்கும் பாதுகாப்பு சுவராக்குவதே அவர்களுடைய பாரம்பரியத்தின் நோக்கமாயிருந்தது, ஆனால் அவர்களுடைய பாரம்பரியம் பிரமாணத்தைவிட மிக முக்கியமானதாகிவிட்டது (மத். 15:5, 9-ஐ காண்க). தேவனுடைய சித்தத்தைச் செய்வதையும் சேர்த்தே தேவனை அறிதல் ஆகும்.

ஒழுக்கமற்ற இஸ்ரவேலரைப் பார்த்து தேவனை அறியாதவர்கள் என்று ஓசியா குற்றம்சாட்டுகிறார், அவர்கள் அறிவு குறைவின் காரணமாக அவர்களுடைய தேசம் அழிவுக்கு நேராய் இருந்தது (ஓசியா 4:1, 2, 6). தேவனை அறிதல் என்பதன் அர்த்தம் நீதியையும் மற்றும் நியாயத்தையும் செயல்படுத்துதலும், தேவனை அறியாமலிருத்தல் என்பது நீதிமானின் இரத்தத்தைச் சிந்துதல் மற்றும் பலவீனனை எதிர்ப்பதும் ஆகும் என்று எரேமியா கூறுகிறார் (எரே. 22:15-17). இன்றைக்குச் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவன் எவனும் தேவனை அறியாதவன் (2 தெச. 1:6-10).

3. *இது ஒரு கிருபையின் உடன்படிக்கை.* தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக நம்மேல் இரக்கமுள்ளவராக இருக்கிறார் (வசனம் 12). அவருடைய இரக்கமானது அவருடைய மன்னிப்பின் மூலம் நமக்கு வழங்கப்படுகிறது. இதுவே புதிய ஏற்பாட்டின் மையக் கருத்தாக உள்ளது (காண்க 10:16-18; மத். 26:28).

4. *இது ஒரு நிரந்தரமான உடன்படிக்கை.* நிருபத்தை எழுதி முடித்த உடனேயே பழைய உடன்படிக்கை காலாவதியானது மற்றும் மறைந்து போனது (எபி. 8:13). நாள்பட்டதாகிறது என்ற வாக்கியம் எபிரெயர் நிருபம் எழுதப்படும் வரை பழைய உடன்படிக்கை இன்னமும் உபயோகத்திலுள்ளது, ஆனாலும் அது ஏற்கனவே நாள்பட்டதாகிவிட்டது என்று அர்த்தம். எப்படி இது இந்த இரண்டு அர்த்தத்தில் இருக்க முடியும்? கிறிஸ்து புதிய உடன்படிக்கையின் கீழ் ஏற்கனவே பிரதான ஆசாரியராக இருக்கிறார், ஆனால் மங்கிக் கொண்டிருக்கிற ஆராதனையோடு ஆலயம் செயல்படுகிறது, இன்னமும் முற்றிலும் மறைந்துவிடவில்லை. இந்த வசனம் கி.பி. 70-ல் நிகழவிருக்கிற எருசலேமின் அழிவைக் குறிக்கிறதாக இருக்க வேண்டும்.

## இஸ்ரவேலும் யூதாவும் (8:8)

பிரிமில்ரினியம் பார்வையாளர்களின் கற்பனை என்னவென்றால், இஸ்ரவேல் மற்றும் யூதர்களின் இராஜ்ஜியம் இன்னமும் நிஜத்தில் திரும்பக் கட்டப்படவில்லை என்பதால் புதிய உடன்படிக்கை இன்னமும் கொடுக்கப்படவில்லை என்பதாகும். புதிய உடன்படிக்கைக்கு அது தேவைப்படுமானால் நம்முடைய நாளில் முழு நம்பிக்கையுடன் இருக்கும் பாவமன்னிப்பு என்பது அழிந்துவிடும். பெந்தெகொஸ்தே நாளில் துவக்கப்பட்ட கிறிஸ்துவின் புதிய உடன்படிக்கையில் எரேமியா 31:31-34-லிலுள்ள தீர்க்கதரிசனத்தின் ஒரு காரியம் நிறைவேறவில்லை என்றால் (அப். 2) எதுவுமே நிகழவில்லை என்று தான் அர்த்தம். அது நிறைவேறியிருக்கிறது, சபையில் கிறிஸ்தவர்கள் முழுப் பாவமன்னிப்பைப் பெற்றுள்ளனர். மன்னிப்பும், புதிய உடன்படிக்கையும் இசைவானது. கற்பனைக்கு, புதிய

உடன்படிக்கை செயலுக்குவர கிறிஸ்து மரித்தபின் இரண்டாயிரம் வருடங்கள் அல்லது அதற்கும் மேலும் ஆகும் என்றால் எபிரெயரை படிக்கும்போது விசுவாசத்தில் பலவீனமானவர்களுக்கு யூத மதத்தைப் பின்னுக்குத் தள்ள இது உதவாது. சத்தியம் என்னவென்றால், வரவிருக்கிற புதிய உடன்படிக்கையின் நிறைவேற்றம் என்பது எபிரெயர் 8-10 அதிகாரங்களுக்குச் சிறிய கவனம் செலுத்தி படிக்கிறவர்களுக்கு மட்டுமே சாத்தியம் ஆகும். புதிய உடன்படிக்கை என்பது இயேசுவுக்காக மேலும் சிறப்பாக வாழ உதவுகிறதாயிருக்கிறது.

யூதா மற்றும் இஸ்ரவேலர் என்பது இன்றைய நாட்களில் தேவனுடைய ஜனங்களையும் தெளிவாகச் சித்தரிக்கிறது. கிறிஸ்து மற்றும் சபை மூலம் தேவனோடு எல்லா புதிய உடன்படிக்கை உறவில் நாம் இருக்கிறோம் (8:8).

**உண்மையாகப் போதித்தல் (8:8, 9)**

எபிரெயர் நிருபத்தில் சொல்லப்பட்டது போல மக்களை இயேசுவிடம் நடத்த அவர்கள் எங்கு இருக்கிறார்களோ அங்கேயே ஆரம்பிக்க வேண்டும். யூதர்கள் பழைய ஏற்பாட்டு வசனங்களை நம்புகிறவர்களாக இருந்தால், பிலிப்பு எத்தியோப்பியனை நடத்தியது போல், நாம் அங்கிருந்து துவக்க வேண்டும். "அப்பொழுது பிலிப்பு பேசத்தொடங்கி, *இந்த வேதவாக்கியத்தை* முன்னிட்டு இயேசுவைக்குறித்து அவனுக்குப்பிரசங்கித்தான்." (அப். 8:35; முக்கியத்துவப்படுத்தப்பட்டுள்ளது). எரேமியா தீர்க்கதரிசனம் உரைத்தது போல், யூதர்கள் உலகம் முழுவதும் சிதறி இருக்கிறார்கள் (எரே. 9:16). அவர்கள் தங்கள் வசனங்களோடு, கிறிஸ்துவுக்கு ஜீவனுள்ள சாட்சியாகச் சேவை செய்கிறார்கள். யூதர்களுடைய வேதாகமம் என்று காண்பிக்க நாம் பழைய ஏற்பாட்டைப் பயன்படுத்தலாம், கிறிஸ்தவப் பகுதியிலிருந்து அது தனியாகப் பாதுகாக்கப்பட்டுள்ளது மற்றும் இந்த நோக்கத்திற்கு அது உதவிகரமாக இருக்கிறது. இப்படிப்பட்ட ஆதாரம் அநேகரை கிறிஸ்துவிடம் வர ஒரு தூண்டுகோலாக அமையும். கிறிஸ்தவர்களுக்கு நிருபங்கள் இருக்கிறது போல், மற்றவர்களுக்கு விசுவாசத்தை உறுதி செய்ய அப்படி ஒன்றும் இல்லை. நமக்கு உயிர்த்தெழுந்த கர்த்தர் இருக்கிறார் மற்றும் தனிப்பட்ட யூத வசனங்களுக்கு ஆதாரமாகப் பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுதல் புதிய ஏற்பாட்டில் உள்ளது. யூதர்கள் தங்கள் பரிசுத்த புத்தகத்துடன், அவர்கள் எப்போதும் கிறிஸ்துவுக்குச் சாட்சிகளாயிருப்பார்கள். விசுவாசத்திற்கு உதவியாக அவர்கள் உலகம் முழுவதும் இருக்கிறார்கள். பழைய ஏற்பாடு தொடர்ந்து நம்மை ஆறுதல்படுத்தி வழிநடத்துகிறதாக இருக்கிறது (ரோமர் 15:4; 1 கொரி. 10:11; கலா. 3:24).

**இருதயத்தில் எழுதப்பட்டுள்ளது (8:10)**

வசனம் 8:10-ன்படி ஒருவருடைய இருதயத்தில் புதிய வல்லமை வைக்கப்படுகிறது, அதன் மூலம் பரிசுத்த ஆவியானவர் நேரடியாகச் செயல்படுகிறபடியால், கிறிஸ்தவர்கள் முற்றிலும் பாவத்தை மேற்கொள்ளுகிறவர்களாக இருக்கிறார்கள் என்று சிலர் கூறுகிறார்கள். நம்மிலுள்ள பாவத்தைச் சிறப்பு வல்லமையினாலும் மற்றும் தேவனுடைய ஆவியினாலும் மேற்கொள்ள முடியுமென்றால், ஒரு கிறிஸ்தவன் விழும்போது ஆவியானவரும் அவருடைய வல்லமையும் வெளிப்பட வேண்டுமே. மனந்திரும்புதலின்போது தெய்வீக தன்மையை நாம் பெறுகிறோமா? இதைக் குறித்துப் பேச 2 பேதுரு 1:2-4-ஐ சிலர் பயன்படுத்துகின்றனர், ஆனால் பேதுரு சொன்னது அதுவல்ல. தெய்வீக பண்பில் நாம் பங்கு "கொள்ளலாம்" என்று அவர் அறிவித்தார். அதாவது, கிறிஸ்தவர்கள் பண்பில் முழுப் பங்குகொள்ளும் வாய்ப்புக் கொடுக்கப்படுகிறது. ஒருவருடைய பிரதியுத்திரத்தின் மேல் ஆவியானவர் ஆளுகை செய்வதில்லை. தேவன் மனுக்குலத்தின் இருதயத்தில் பலவந்தம் செய்வதில்லை.

"நம்முடைய இருதயத்தில் எழுதப்பட்டுள்ளவற்றை" நாம் எவ்வாறு தேவனுடைய சித்தமாக்குவது? இந்த உணர்வை கற்பனை செய்து பார்க்கவும். பள்ளிப் பகுதியில் வேறு சிந்தையுடன் மணிக்கு 35 மைல்கள் வேகத்தில் வாகனத்தைச் செலுத்திக்கொண்டிருக்கையில் கார் நிறுத்தும்பகுதியில் இரண்டு கார்களுக்கு நடுவிலிருந்து 7 வயது சிறுவன் குறுக்கே வந்துவிட்டான். நீங்கள் உடனே பிரேக் போட்டும் உங்கள் வாகனம் அவனைத்தொட்டு நின்றது. நீங்கள் உடனே வேர்த்து விருவிருத்துப் போவீர்கள். சிறுவனைக் கொல்லுமளவுக்கு அவன் அருகில் வந்துள்ளீர்கள்! இந்த நாளிலிருந்து, அறிவிப்புப் பலகையில் "பள்ளிப் பகுதி வேகம் 15 மைல்கள் வேகம் தேவை" என்று எழுதப்பட்ட பலகை உங்களுக்குத் தேவைப்படாது. இந்த விதிமுறை உங்கள் இருதயத்தில் எழுதப்பட்டுள்ளது.[27]

அவைகள் அவர்களுடைய "இருதயத்தில் எழுதப்பட்டுள்ளது" என்பதன் அர்த்தம் தேவனுடைய சித்தத்தை நம்முடைய வாழ்க்கையின் மையமாக்கிவிடுவோம், ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்தித் தேவனுடைய வெளிப்பாட்டைச் சோர்ந்துபோகாமல் பின்பற்றுவோம். கல்லில் உள்ளவற்றிற்கு நாம் அதிக மதிப்பு கொடுப்பதில்லை, மாறாக நம்முடைய இருதயங்கள் தேவனாலும் மற்றும் நாம் நேசிக்கிற பிதாவினால் நிறைந்திருக்கிறது. தேவனை நேசித்துக் கீழ்ப்படிதலில் ஆர்வமானது நம்முடைய வாழ்க்கைக்குள் தெய்வீக பண்பை முழுமையாக கொண்டுவருகிறதாயிருக்கிறது. நாம் தேவனை நேசிக்கும்போது, பாடுவதும், ஆராதிப்பதும் வேதாகம பாடங்களும் நம்மை மகிழ்ச்சியாக்குகிறதாயும் மற்றும் ஆச்சரியப்படுத்துகிறதாயும் இருக்கின்றன. விசுவாசத்திலும் மற்றும் உண்மையாக வந்து தேவனை

அறிந்த ஒருவன், பிதாவினிடத்தில் ஒரு சாதாரண ஜெபம் செய்தால் அவனுக்கு மகிழ்ச்சியின் கண்ணீரைக் கொண்டுவருகிறதாயிருக்கிறது. நாம் உண்மையாகத் தேவனை நேசித்து அறியும்போது, நாம் அவரைக் கோபமுள்ள தெய்வமாகக் காணமாட்டோம், மாறாக நேசிக்கும் பிதாவாகக் காணலாம். தேவனுடைய பார்வைக்கு வந்த பாவமானது உடனே பதிவிலிருந்து அழிக்கப்படும் என்பதைப் பேசமுடியாத உணர்வினால் நாம் நன்றாக அறிந்து கொள்ளமுடியும். ரோமர் 8:31-ஐ நாம் முழுவதும் நம்புகிறோம், அது சொல்கிறது, தேவன் நமக்காக இருக்கிறார். அவருடைய வார்த்தையை நம்முடைய இருதயங்களில் எழுதிக்கொள்வோம்.

**அவர்களுடைய மனதில் உள்ள பிரமாணங்கள் (8:10)**

கிறிஸ்துவில் தங்களுக்கு இருக்கும் விடுதலையானது எல்லா பிராமாணங்களையும் நீக்கிவிட்டது மற்றும் கட்டுப்பாட்டில் இருந்து விலக்கியிருக்கிறது என்று நினைக்கும் சிலர் பிரமாணத்தை கடைப்பிடிப்பதன் மூலம் தேவன் மீதுள்ள அன்பை வெளிப்படுத்துகிறோம் என வார்த்தைக்கு தவறுகின்றனர் (யோவான் 14:15). அன்பு என்பது உண்மையில் பிரமாணத்தை நிறைவேற்றுவதாகும் (ரோமர் 13:8-10), ஆனால் தேவனை நேசிப்பதனால் எல்லாப் பிரமாணமும் நீக்கப்படுவதற்கு இதுவே காரணமாக இருக்க வழியே இல்லை. மோசேயின் பிரமாணத்தினாலோ அல்லது வேறு எந்தப் பிரமாண முறைமையினாலோ ஒருவரும் நீதிமானாக்கப்பட்டதில்லை, ஆனால் ஒரு உடன்படிக்கை சில நிபந்தனைகளின் அடிப்படையில் வாக்குத்தத்தத்தை நிறைவேற்றிச் செயல்படுத்துகிறதாயிருக்கிறது.

மோசேயின் பிரமாணத்திலிருந்து விடுதலையாயிருக்கிறோம், ஆனால் கிறிஸ்துவின் பிரமாணத்தின் கீழ் இன்னமும் கீழ்படிந்திருக்க வேண்டும் என்பதைப் பவுல் அறிந்திருந்தார் (1 கொரி. 9:21). நம்முடைய கீழ்ப்படிதல் என்பது தேவன் நம்முடன் கொண்டுள்ள ஒப்பந்தம் அல்லது உடன்பாடு ஆகும். ஒருவன் கீழ்ப்படிதல் இல்லாமல் தேவன் மேலுள்ள அன்பை உண்மையில் வெளிப்படுத்த முடியுமா? சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாமல் ஒருவன் இரட்சிக்கப்பட்டவனாக இருக்க முடியுமா (2 தெச. 1:6-10; 1 பேதுரு 4:17)? இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை, சாமுவேல் சவுலிடம் சொன்னார், “பலியைப்பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம்” (1 சாமு. 15:22 பிற்பகுதி).

பிரமாணத்தை கடைப்பிடிப்பது மூலம் ஒருவன் இரட்சிப்பைப் பெற இயலாது, காரணம் எல்லோரும் பாவிகள் (ரோமர் 3:23). ஒருவரும் இரட்சிப்பைப் சம்பாதிக்க முடியாது ஆனால் கிறிஸ்துவின்

அன்பான அழைப்பின் மூலம் நாம் அதை பெற்றுக்கொள்ளலாம் (மத். 11:28-30; வெளி. 3:20). எல்லாக் கட்டளைகளுக்கும் நாம் கீழ்ப்படிந்தாலும்கூட, அப்பிரயோஜனமான ஊழியக்காரராக இருக்கிறோம் (லூக். 17:10). தேவனுடைய இரக்கத்தின் மூலம் யாவரும் இரட்சிக்கப்படலாம்.

**தேவனோடு ஐக்கியம் கொள்ளுதல் (8:10, 11)**

"நான் அவர்களுடைய தேவனாயிருப்பேன்" மற்றும் "எல்லாரும் என்னை அறிவார்கள்" என்பவை புதிய உடன்படிக்கையின் விசேஷமாகக் குறிப்பிடத்தக்கவைகளாகும். நாம் தேவனோடு நடக்கும்போதும் மற்றும் அவருக்குள் வாழும்போதும் நாம் அவருடன் தொடர்ந்து ஐக்கியம் கொண்டுள்ளோம். இது வசனங்களில் தனிமைப்படுத்தப்பட்ட சிந்தனை அல்ல, பல்வேறு வழிகளில் இது பயன்படுத்தப்பட்டுள்ளது. வெளிப்படுத்தின விசேஷம் 3:20-ல் ஒருவன் தன் இருதயமாகிய "கதவைத் திறந்து" அவனுக்குள் பிரவேசிக்க அனுமதித்தால், அவர் அவனுடன் விருந்து உண்பார் என்று இயேசு வாக்குப்பண்ணுகிறார். யோவான் 17:21-ல் அவர் கிறிஸ்தவர்களுக்காக ஜெபிக்கிறவராக இருக்கிறார், அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, "நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்." கிறிஸ்தவர்கள் பிதாவிற்குள்ளும் மற்றும் குமாரனுக்குள்ளும் இருக்க முடியும், அது தேவனுக்குள் நெருக்கமான ஐக்கியத்தைக் காட்டுகிறது. இயேசு, சீஷர்கள் "திராட்சை செடியின் கொடிகள்" மற்றும் தாம் திராட்சைச் செடி என்று கூறினார் (யோவான் 15:5). திராட்சைச் செடியாகிய கிறிஸ்துவில் "நிலைத்திருப்பது" சீஷர்களின் கடமை, ஒருவன் நிலைத்திராவிட்டால் அவன் வெட்டப்பட்டு நெருப்பிலே போடப்படுவான் (15:6). "ஒளியில் நடத்தல்" (1 யோவான் 1:7), என்பது அவருக்குள் நடத்தல் அல்லது கிறிஸ்துவைப் பின்பற்றுதல் எனப்படும்.

தேவன் நம்முடன் நெருங்கிய ஐக்கியம் கொண்டுள்ளார், இந்த நிகழ்கால வாழ்க்கையில் நாம் அவருடைய பிள்ளைகளாயிருக்கிறோம். நாம் அவருடையவர்கள், அவர் நம்முடையவர் என்ற விளைவினால் - உலகத்தைவிட்டு வெளியே வந்து விலகி இருக்கும்படி பவுல் கொரிந்தியர்களிடம் புத்திமதி கூறினார் (2 கொரி. 2:16-18). அதேவேளையில், வெளிப்படுத்தின விசேஷம் 21:3, 4 என்பது அடிக்கடி பரலோகத்திற்கு ஏற்புடையதாக உள்ளது, தேவன் இப்போது நம்முடன் வாசம்பண்ணியிருக்கிறார். நம்முடைய துக்கம், பயம், மற்றும் திடீர் மரணத்திலிருந்து நம்மை விலக்கிப்போடுவார் (எபி. 2:14, 15-ஐ காண்க). கிறிஸ்துவுக்குள் நாம் அடிமைத்தனத்திலிருந்து

விடுதலையாக்கப்பட்டுள்ளோம். தேவன் நம்மோடு இருப்பது என்பது நிகழ்கால உண்மையாகும். புதிய உடன்படிக்கையின் வாக்குத்தத்தங்கள் எல்லாம் அதற்கு மேலுமாக இருக்கிறது.

கடைசிகாலம் வரும்போது, தேவன் முழுவதுமாகவும் மற்றும் நித்தியமாகவும் நம்முடன் இருப்பார். சபையானது பரலோகத்தை முன்நிழலிடும் நிகழ்கால உண்மையாயிருக்கிறது (வெளி. 21:3). வாக்குத்தத்தத்தின் பிரமாண்ட நிறைவேறுதல் என்பது இந்த உலகத்தில் நம்முடைய வாழ்வில் உரிமைகொள்ள முடியாத விதத்தில் இருப்பது உண்மையாகும்.

புதிய உடன்படிக்கையின் கீழ், நாம் இன்னமும் "நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம்" (2 கொரி. 5:7). "தனிப்பட்ட அனுபவத்தின்" மூலமாக அல்ல, வார்த்தையிலிருந்து வருகிற விசுவாசத்தினாலும் மற்றும் விசுவாசத்தின் மூலமாகவும் நாம் தேவனை அறிகிறோம் (ரோமர் 10:17). தேவன் நம்மைத் தனிப்பட்ட விதத்தில் அறிவார், ஆனால் நாம் அவரை அவ்வாறாக அறியவில்லை. நம்முடைய வேத வாசிப்பு மற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் வளர்வது மூலம் நமக்குத் தேவையான எல்லா விதத்திலும் தேவனை அறிகிறோம். நன்மை தீமை கொண்ட வாழ்வின் அனுபவங்கள், அவருடைய வாக்குத்தத்தங்களையும் மற்றும் ஆசீர்வாதங்களையும் பெருமை பாராட்ட நமக்கு உதவியாயிருக்க முடியும். ஆம், நாம் தேவனில் தனிப்பட்ட விசுவாசம் கொண்டிருக்க வேண்டும், நாம் அவருடன் கொண்டிருக்கிற உறவும் "தனிப்பட்ட" விதமாகப் புரிந்துணர்வோடு மகிமைக்காக காத்திருக்க வேண்டும்.

**விசுவாசமும் தொல்லியலும் (8:13)**

எபிரெயர் எழுதப்பட்ட சில நாட்களில் ஆலயம் உடைக்கப்பட்டிருக்க வேண்டும்: "சூரியன் உதித்திருந்தாலும்கூட, சந்திரன் இன்னமும் மறையவில்லை."[28] இயேசு முன்னறிவித்திருந்தது, "இவ்விடத்தில் ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டுப்போகும்" (மத். 24:2). ஆலயத்தின் அழிவிற்கான காரணம் விவாதத்திற்கு உட்பட்டதாகும். அது அழிக்கப்படக் கூடாது என்று ரோம அதிகாரி தீத்து கட்டளையிட்டதாக ஜோசிபஸ் சொல்கிறார். ஆலயம் தீயினால் அழிக்கப்பட்டது என்பது ஒருசாரார் கருத்து, ஆலய கட்டுமானத்திற்குத் தங்கம் பயன்படுத்தப்பட்டுள்ளதை நினைவில்கொள்ள வேண்டும். தீயின் தாக்கம் தங்கத்தை உருகப்பண்ணிற்று, பாறையின் இடுக்குகளில் ஊடுருவி சென்றது. வீரர்கள் தங்கத்தை எடுப்பதற்குக் கற்களை உடைக்க வேண்டியதாயிருந்தது. பின்பு அவர்கள் கற்களைத் தெருவில் எறிந்தார்கள். ஆலயக் "கட்டிடம்" (மத். 24:1) முற்றிலும் இடிக்கப்பட்டது. கி.பி. 70-ல் வீசப்பட்ட கற்கள் இன்றும் அங்கு இருப்பதைக் காணலாம்.

மற்றவர்கள் சந்தேகத்திற்கு இடமின்றிப் பழைய எருசலேமில் கட்டிடங்களைக் கட்டுவது வழக்கம். சில இறை மறுப்பாளர்கள் எருசலேமில் ஆலயம் இல்லை என்று வாதிட்டனர், ஆனால் தொல்லியல் துறை ஆதாரத்துடன் அது தவறானது என்று நிருபிக்கப்பட்டுள்ளது.

வேதாகம மாணவர்களுக்கும் மற்றும் முனைவர்களுக்கும் தொல்லியல் என்பது பெரிய கருவியாகும், ஆனால் தேவனிலும் மற்றும் அவருடைய வார்த்தையில் விசுவாசத்தை உருவாக்குகிற வேதாகமத்திலுள்ள ஆதாரங்களுக்கு எதுவும் இணையாகாது. நம்முடைய வேதாகம புரிதலுக்கு ஒளியூட்டவும் மற்றும் ஆச்சரியமான உண்மைகளை அறியவும், விசுவாசத்திற்கு தொல்லியல் ஆதாரமாக இருக்க முடியும் என்பது நிச்சயம், ஆனால் தேவன் இருக்கிறார் மற்றும் கிறிஸ்து கன்னியினிடத்தில் பிறந்தார், மற்றும் அவர் மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்தார் என்று தொல்லியல் மூலம் ஒருபோதும் நிரூபிக்கவோ அல்லது நிராகரிக்கவோ முடியாது. பொருட்களின் கண்டுபிடிப்புகள் அதிகமாக அதிகமாக வேதாகமத்தின் வரலாற்று நம்பகத்தன்மை மீண்டும் மீண்டும் ஆதாரப்பூர்வமாகும். கடந்த காலத்தில் இது பல முறை நிகழ்ந்துள்ளது, அறிவார்ந்த வாசகர்கள் ஒருவரும் வேதாகமத்தை சந்தேகப்பட்டதே இல்லை என்பது ஆச்சரியமான ஒன்று ஆகும். உதாரணமாக, பிலாத்துவைக் குறித்து வெகு காலத்திற்கு முன்பே வேதாகமம் சொல்லிவிட்டது, ஆனால் தொல்லியல் துறை 1961 வரை அவர் வாழ்ந்த காலத்தை உறுதிப்படுத்தவில்லை, இடிபாடுகளில் ஒரு அடிக்கல்லில் செசரியாவில் அவருடைய பெயர் பொரிக்கப்பட்டிருந்ததைக் கண்டுபிடித்தனர். இம்மாதிரியான கண்டுபிடிப்புகள் விசுவாசத்தை உருவாக்காது, ஆனால் விசுவாசிகளிடத்தில் உற்சாகத்தையும் மற்றும் ஆறுதலையும் உண்டாக்க முடியும்.

---

இறுதிக் குறிப்புகள்

[1]"வார்த்தை சுருக்கம் என்பது *கெபலையஸ்* (κεφάλαιος) என்ற வார்த்தையின் மொழிபெயர்ப்பு, அதன் அர்த்தம் 'மையப் புள்ளி.' இது முன்னிகழ்வுகளின் சுருக்கத்திற்கு பொருந்தாது, ஆனால் முக்கியப் புள்ளிகளைப் பின்பற்றிவருபவைகளைக் குறிக்கும்" (Kenneth Samuel Wuest, *Hebrews in the Greek New Testament for the English Reader* [Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1951], 140). [2]Gareth L. Reese, *A Critical and Exegetical Commentary on the Epistle to the Hebrews* (Moberly, Mo.: Scripture Exposition Books, 1992), 125, n. 5. [3]சில வகைகளில் இது உண்மையாக இருக்கலாம், கடைசித் தருனத்தில் ஆவியானவர் அவன் மூலமாகத் தீர்க்கதரிசனமாகப் பேசுவதற்காக, தேவன் காய்பாவை தமது பிரதிநிதியாக இன்னமும் எண்ணியிருக்கலாம் (யோவான் 11:47-53). [4]Robert Milligan, *A Commentary on the Epistle to the Hebrews*, New Testament Commentaries (Cincinnati: Chase and Hall, 1876; reprint, Nashville: Gospel Advocate Co., 1975), 276-80. [5]Donald Guthrie, *The Letter to the Hebrews: An Introduction and Commentary*, The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1983),

172. [6]F. F. Bruce, *The Epistle to the Hebrews*, The New International Commentary on the New Testament (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1964), 164-65. [7]Neil R. Lightfoot, *Everyone's Guide to Hebrews* (Grand Rapids, Mich.: Baker Books, 2002), 105. [8]பாவத்திலிருந்து தப்பித்துக்கொள்ள உதவும் காரியத்தை ரோமர் 6:17, 18-ல் பவுல் *டுபோஸ்* (τύπος) என்னும் வார்த்தையைப் பயன்படுத்தி குறிப்பிடுகிறார். ஞானஸ்நானத்தில் கீழ்ப்படியும்படிக்கு குறிப்பிடுவதே "மாதிரி" (6:3, 4), அது கிறிஸ்துவின் மரணம், அடக்கம்பண்ணுதல், மற்றும் உயிர்த்தெழுதலின் "மாதிரி" நம்முடைய கீழ்ப்படிதலில் திரும்பச் செயல்படுத்தப்பட்டுள்ளது. [9]புதிய ஏற்பாட்டின் கீழ் தேவனுக்கு எவ்வாறு சேவை செய்வது என்பதற்கான தேவனுடைய அறிவுரை "மாதிரி" யோசனையின் மூன்று-பக்க விவாதத்தினை ஜேம்ஸ் பர்டன் கோப்மேன் கொடுத்தார். கிறிஸ்துவிடம் மனந்திரும்புவதற்குக் கீழ்ப்படிதலுக்கான செயல் முறைமையைத் தேவன் கொண்டிருந்தார், அதில் மனந்திரும்புகிற அனைவரும் ஒரே விதிகள் அல்லது "இரட்சிப்பின் திட்டத்திற்குக்" கீழ்ப்படிய வேண்டும் என்று அப்போஸ்தலரிலிருந்து அவர் வாதிட்டார். நாம் தேவனை ஆராதிக்கும் முறைமைகளை வேதம் போதிக்கிறது என்று அவர் மேலும் கூறிப்பிடுகிறார். எல்லாவற்றிற்கும் மேலாக, கிறிஸ்தவ வாழ்க்கை எவ்வாறு வாழ்வது என்பதற்கான முறைமையை விளக்கி கூறினார். (James Burton Coffman, *Commentary on Hebrews* [Austin, Tex.: Firm Foundation Publishing House, 1971], 170-73.) [10]Jimmy Allen, Survey of Hebrews, 2d ed (Searcy, Ark.: by the author, 1984), 89.

[11]Neil R. Lightfoot, *Jesus Christ Today: A Commentary on the Book of Hebrews* (Grand Rapids, Mich.: Baker Book House, 1976), 156. [12]Ibid. [13]Philo *Life of Moses*, II 15. [14]Bruce, 167. [15]The word for "new" (καινός, *kainos*) means "of a brand new kind." [16]Adapted from Milligan, 290-91. [17]Guthrie, 175. [18]Bruce, 173. [19]Craig R. Koester, *Hebrews: A New Translation with Introduction and Commentary*, The Anchor Bible, vol. 36 (New York: Doubleday, 2001), 386-87. [20]Reese, 135, n. 42.

[21]Lightfoot, *Jesus Christ Today*, 160. [22]Warren W. Wiersbe, *Be Confident: An Expository Study of the Epistle to the Hebrews* (Wheaton, Ill.: Victor Books, 1982), 93. [23]Raymond Brown, *The Message of Hebrews: Christ Above All*, The Bible Speaks Today (Downers Grove, Ill.: InterVarsity Press, 1982), 142. [24]Ray C. Stedman, *Hebrews*, The IVP New Testament Commentary Series (Downers Grove, Ill.: InterVarsity Press, 1992), 87. இருந்து இந்த யோசனை பயன்படுத்தப்பட்டுள்ளது. [25]Brown, 150-51. இருந்து பின்வருவன எடுக்கப்பட்டுள்ளது. [26]Lightfoot, *Everyone's Guide to Hebrews*, 108-11 இருந்து பின்வருவன எடுக்கப்பட்டுள்ளது. [27]Adapted from Hugo McCord, *Fifty Years of Lectures* (Atwood, Tenn.: Privately printed, n.d.), 183. [28]Arthur W. Pink, *An Exposition of Hebrews* (Grand Rapids, Mich.: Baker Book House, 1954), 436.